بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ     نَحْمَدُہٗ وَنُصَلِّی عَلٰی رَسُوْلِہِ الْکَرِیْمِ     وَعَلٰی عَبْدِہِ الْمَسِیْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - துல்கஅதஃ 25★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - இஹ்ஸான் 15 ★ 15 ஜூன் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَرَحْمَتِیْ وَسِعَتْ كُلَّ شَیْءٍ ؕ فَسَاَكْتُبُهَا لِلَّذِیْنَ یَتَّقُوْنَ وَیُؤْتُوْنَ الزَّكٰوةَ وَالَّذِیْنَ هُمْ بِاٰیٰتِنَا یُؤْمِنُوْنَ ۚ﴿۱۵۷﴾

என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இறையச்சத்தை மேற்கொண்டு ஸகாத் கொடுப்போருக்கும், மேலும் நம் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்வோருக்கும் நான் அதனை கட்டாயம் எழுதுவேன். (அல்அஃராப் :157)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான நபித்துவ சிறப்புகளின் தொகுப்பாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) ஸஹாபிகளைக் கண்டு, அவர்கள் முழுமையான முன்னேற்றங்களை அடைய வேண்டும் என்று விரும்பி வந்தார்கள். இறுதியில் உலகம் ஒருபோதும் அடைந்திராத (அந்தஸ்)தை அடைந்தார்கள். எவரும் கண்டிராததை கண்டார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

### நபிமார்களிடம் அனுதாபத்திற்கான உத்வேகம்

நபியின் வருகை அவசியமாக இருக்கின்றது. அவருடன் பரிசுத்த ஆற்றல் இருக்கின்றது. மேலும், அவர்களின் உள்ளத்தில் மக்கள் மீதான அனுதாபம், நன்மை பயத்தல் மற்றும் பொதுவான நன்மையை நாடுதல் ஆகியவற்றிற்கான நிம்மதியிழக்கச் செய்யக்கூடிய உத்வேகம் இருக்கின்றது.

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا یَكُوْنُوْا مُؤْمِنِیْنَ ﴿۴﴾

என்று அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கூறியுள்ளான். (அஷ்ஷுஃரா: 04) பொருள்: நீர் அவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை என்பதற்காக உம்மை நீரே மாய்த்துக் கொள்வீரா?

இதற்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, நிராகரிப்பாளர்கள் ஏன் முஸ்லிம்கள் ஆகிவிடுதில்லை என்று அவர்களைப் பற்றியது. இரண்டாவது, முஸ்லிம்களைப் பற்றியது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் பெறுகின்ற அந்த உயர் தரமான ஆன்மிக ஆற்றல் (முஸ்லிம்களாகிய) அவர்களிடம் ஏன் உருவாகுவதில்லை? என்பது. முன்னேற்றம் என்பது படிப்படியாக நிகழ்கின்றது. எனவே ஸஹாபிகளின் முன்னேற்றங்களும் படிப்படியாகவே நிகழ்ந்தன. ஆனால் , நபிமார்களின் உள்ளத்தின் அமைப்பு முற்றிலும் அனுதாபத்தையே கொண்டதாக இருக்கின்றது. பின்னர், நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ முழுமையான நபித்துவ சிறப்புகளின் தொகுப்பாக இருந்தார்கள். அன்னாரிடத்தில் அனுதாபம் இந்த உச்சபட்ச அந்தஸ்தில் இருந்தது. ஸஹாபிகளைப் பார்த்து, அவர்கள் முழுமையான முன்னேற்றங்களை அடைய வேண்டும் என்று விரும்பி வந்தார்கள். ஆனால், இந்த உச்சபட்ச நிலை ஒரு காலத்திற்கென்று விதிக்கப்பட்டிருந்தது. இறுதியில், உலகம் ஒருபோதும் அடைந்திராத (அந்தஸ்) தை ஸஹாபிகள் அடைந்தனர். மேலும், எவரும் கண்டிராததை அவர்கள் கண்டனர்.

### அனைத்தும் கடும் முயற்சிகளை அடிப்படையாக கொண்டுள்ளது

அனைத்தும் கடும் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. وَالَّذِیْنَ جَاهَدُوْا فِیْنَا لَنَهْدِیَنَّهُمْ سُبُلَنَا ؕ என்று அல்லாஹ் கூறுகின்றான். எந்த மக்கள் எமது வழியில் நின்று முயற்சி செய்கின்றார்களோ நாம் அவர்களுக்கு எமது அனைத்து வழிகளையும திறந்து கொடுத்துவிடுகின்றோம். (அல்அன்கபூத்: 70) கடும் முயற்சிகள் இன்றி, எதுவும் நடக்க முடியாது. ஸய்யிது அப்துல் காதிர் ஜெய்லானி (ரஹி) அவர்கள் ஒரு பார்வையில் திருடனை குதுப் ஆக ஆக்கிவிட்டார்கள் என்று கூறுகின்ற மக்கள்

இதன் தொடர்ச்சி : 11ம் பக்கம்

**திருக்குர்ஆனின் மாபெரும் சிறப்பு என்னவென்றால் அது பாவத்திலிருந்து மட்டும் (மனிதனை) தடுப்பதில்லை. மாறாக, பாவத்திலிருந்து தடுக்கக் கூடிய வழிமுறைகளையும் கூறுகின்றது.**

وَلَا تَقْرَبُوا الزِّنٰۤی اِنَّهٗ كَانَ فَاحِشَةً ؕ وَسَآءَ سَبِیْلًا ﴿۳۳﴾ (17:33)

என்ற வசனத்தின் விளக்கவுரையில் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பிள்ளைகளை கொலை செய்தல் பற்றிய குறிப்பிற்குப் பிறகு, விபச்சாரத்திலிருந்து தப்பிக்கும்படி அல்லாஹ் இந்த வசனத்தில் கட்டளை வழங்கியுள்ளான். இதில் ஒரு நுட்பமான சைகை உள்ளது. அதாவது, விபச்சாரத்தின் மூலமும் பிள்ளைகள் கொலை செய்யப்படுகின்றனர். ஏனெனில், முதலில், ஆகுமற்ற வழிகளில் பிறந்த பிள்ளைகளை பொதுவாக வீணாக்குவதற்கு முயற்சி செய்யப்படுகின்றன. இரண்டாவதாக, அவர்கள் வீணாக்கப்படவில்லையென்றாலும் கூட அவர்களின் தர்பிய்யத் மற்றும் பராமரிப்பில் ஆண் வெளிப்படையாக பங்கு பெற முடியாது. மேலும் அந்தப் பிள்ளைகள் பொதுவாக பராமரிப்பவர் இன்றியும், அனாதைகளாகவும் இருந்து நாசமாகி விடுகின்றனர். لَا تَقْرَبُوا الزِّنٰۤی என்ற சொற்களை பயன்படுத்தி இந்த விஷயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது, விபச்சாரத்திற்கான சந்தர்ப்பமே உருவாக அனுமதித்து விடாதீர்கள். அதாவது, அந்நியப் பெண்களை தனிமையில் சந்திக்காதீர்கள். அவர்களுடன் தொடர்புகள், சந்திப்புகள் என்று எதனையும் வைக்காதீர்கள். திருக்குர்ஆனின் மாபெரும் சிறப்பு என்னவென்றால் அது பாவத்திலிருந்து மட்டும் (மனிதனை) தடுப்பதில்லை. மாறாக, பாவத்திலிருந்து தடுக்கக் கூடிய வழிமுறைகளையும் கூறுகின்றது. மேலும் அதுபோன்ற போதனைதான் மனிதகுலத்தை பாதுகாக்க முடியும். பாவத்திலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகளை கூறாத வேதம் மனிதனை ஒரு துன்பத்தில் ஆழ்த்திவிடுகின்றது. ஒரு

இதன் தொடர்ச்சி : 11ம் பக்கம்

## நபிமொழி

**கியாமத் நாளன்று மூன்று நபர்களுடன் அல்லாஹ் பேசவும் மாட்டான். அவர்களின் பக்கம் பார்க்கவும் மாட்டான்.**

(2369) ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கியாமத் நாளன்று மூன்று நபர்களுடன் பேசவும் மாட்டான். அவர்களின் பக்கம் (பரிவுடன்) பார்க்கவும் மாட்டான். அதில் ஒரு நபர் யாரென்றால், தனது வியாபாரப் பொருட்களை விற்பதற்காக (பொய் சத்தியம் செய்தவர்). அதாவது, தற்போது எனக்கு கொடுக்கப்படுவதை விட நான் இதற்காக மிக அதிகமாக (விலை) கொடுத்துள்ளேன் என்று பொய் சத்தியம் செய்பவர். மேலும், அஸருக்குப் பிறகு ஒரு முஸ்லிம் நபரின் செல்வத்தை பறிப்பதற்காக பொய் சத்தியம் செய்தவர். மேலும், தனது உபரி நீரை தடுத்து நிறுத்திக் கொண்ட நபர்.

அப்போது, எவ்வாறு உமது கைகள் உருவாக்காத அந்த உபரியான பொருளை நீர் தடுத்துக் கொண்டீரோ அதுபோன்று இன்று நானும், எனது அருளை உன் மீது தடுத்துக் கொள்கின்றேன் என்று அல்லாஹ் (கியாமத் நாளன்று கூறுவான்). (ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மஸாகாத், காதியான் பதிப்பு 2008 ஆம் ஆண்டு)

(ஸஹீஹுல் புகாரி, தொகுதி 4, கிதாப் அல்மஸாஃபாத், 2008 ஆம் ஆண்டு பதிப்பு, காதியான்)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் சூரா அந்நஹ்ல் வசனம் 91-ல் குறிப்பிடப்பட்டுள்ள நன்மைகள் அதாவது நீதி, அதிகப்படியான நன்மை மற்றும் ஈதாயிதில் குர்பா தொடர்பான ஆழிய ஞானமிக்க பேருரை**

**அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் உங்களுடைய தொடர்பு எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், அதில் செயற்கைத் தன்மையும், பாசாங்கும் ஒருபோதும் இருக்கக் கூடாது**

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்(அலை) அவர்கள்)

**உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளம் இதுவே ஆகும். அதாவது அவர் தனது ஈமானை உறுதிபடுத்துவதற்காக அல்லாஹ்வின் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளின்படி செயல்பட வேண்டும்**

**அல்லாஹ்வின் கட்டளையை கருத்தில் கொண்டவாறு தன்னை சீர்திருத்திக் கொள்வதும், உலகத்தின் சீர்திருத்தத்திற்காக முயற்சி செய்வதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் கடமையும் பொறுப்பும் ஆகும்**

**திருக்குர்ஆனின் போதனையைப் போன்ற தூய போதனை தவ்ராத்திலும் நாம் காணவில்லை. இன்ஜீலிலும் நாம் காணவில்லை. ஒவ்வொரு பக்கத்தையும் நாம் படித்தோம். ஆனால், திருக்குர்ஆனின் போதனையைப் போன்ற தூய, முழுமையான போதனையின் பெயர் மற்றும் அடையாளம் கூட அதில் இல்லை**

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

**பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆ செய்வதற்கான அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **05ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآئِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ ۚ

يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

நிச்சயமாக (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு கொடுப்பதைப்போல)க் கொடுக்கவும் அல்லாஹ் கட்டளையிடுகின்றான். (எல்லா வகை) வெட்கக் கேட்டிலிருந்தும், வெறுக்கத் தக்கவற்றிலிருந்தும், வரம்புமீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். (அந்நஹ்ல்:91)

இந்த வசனம் ஒவ்வொரு ஜுமுஆவின் இரண்டாவது குத்பாவிலும், இரு பெருநாள்களின் இரண்டவாது குத்பாவிலும் ஓதப்படுகின்றது. இதில் சில நன்மைகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை செய்வதற்கு அல்லாஹ் கட்டளை வழங்கியுள்ளான். மேலும், சில தீமைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து தவிர்ந்திருக்குமாறு அல்லாஹ் வழிகாட்டல் வழங்கியுள்ளான். தனது ஈமானை வலுப்படுத்துவதற்காக அல்லாஹ்வின் வழிகாட்டல்களின்படி அறிவுரைகளின்படி அமல் செய்வதுதான் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

இல்லையென்றால், ஒரு முஸ்லிமை உண்மையான நம்பிக்கையாளராக ஆக்கக்கூடிய அந்தத் தரம் கிடைப்பதில்லை. இந்த வசனத்தில் எந்த நன்மைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ, அதாவது அத்ல்- நீதியுடன் நடத்தல், இஹ்ஸான்- அதிக நன்மை புரிதல் மற்றும் ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்கு வழங்குவதைப் போன்று வழங்குதல் ஆகியவை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய பல்வேறு நூல்களில் எழுதிய, மேலும் தம்முடைய பல்வேறு சபைகளில் எடுத்துரைத்த விஷயங்களை நான் முன்வைப்பேன்.

ஒவ்வொரு வழிகாட்டலும், ஒரே மையப்புள்ளியைத்தான் சுற்றி வருகிறது. ஆனால், பல்வேறு விதத்தில் அறிவுரைகள் இருக்கின்றன. அவை நமது வாழ்வை அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நாம் கழிப்பதன் பக்கம் நம்மை வழி நடத்துகின்றன. அன்னார் (அலை) இந்தச் சிறப்புகளையும், நன்மைகளையும் மனிதர்களுடனான தொடர்புகள் பற்றி மட்டுமே எடுத்துரைக்கவில்லை. அதற்கும் மேற்பட்டு, இறைவனோடு எவ்வாறு நீதியுடனும், அதிக நன்மை புரிந்தும், உறவினர்களுக்கு வழங்குவதைப் போன்று வழங்கும் தொடர்பையும் வைப்பது என்ற விஷயத்தை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

அன்னார் (அலை) இதற்கு எந்த அளவு ஞானமிக்க வகையில் அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்றால் அதன் மூலமாக உண்மையான முறையில் இறைவனுடனான தொடர்பு கொள்வதற்கான இறைஞானம் கிடைக்கின்றது. அது ஈமான் மற்றும் நிச்சய உறுதியின் புதிய படித்தரங்கள் வரை ஒரு நம்பிக்கையாளரைக் கொண்டு செல்கின்றது. எவ்வாறு இருப்பினும், இப்பொழுது நான் சில மேற்கோள்களை உங்கள் முன் வைப்பேன். அவற்றில் மனிதன் கவனம் செலுத்தினால் அவற்றை தனது வாழ்வின் அங்கமாக்குவதற்கு முயற்சி செய்தால், உண்மையில் நம்மை இறைவனோடு இணைக்கக்கூடிய மற்றும் ஒருவர் மற்றவருக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்துவதன் பக்கமும் கவனமூட்டுகின்ற ஒரு செயல் திட்டம் நமக்குக் கிடைக்கின்றது. இவ்வாறு அல்லாஹ்வுக்கான உரிமைகளையும், அடியார்களுக்கான உரிமைகளையும் செலுத்தக்கூடிய அழகான ஒரு சமூகத்தை கட்டமைக்கின்றது.

இதுதான் ஒரு சமூகத்தின் அமைதிக்கும் உத்தரவாதமாகும். உலகத்தின் அமைதிக்கான உத்திரவாதமும் ஆகும். ஆனால், உலகத்தின் பெரும்பான்மை ஒருவர் மற்றவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதில் துணிச்சல் கொண்டுள்ளது என்பது வருத்தத்திற்குரிய விஷயம் ஆகும். அது முஸ்லிம் உலகமாகட்டும். முஸ்லிம் அல்லாதவர்களின் உலகமாகட்டும்.

முஸ்லிம்கள் அல்லாஹ்வின் பெயரை கூறுகின்றார்கள்தான்; ஆனால், அல்லாஹ்வின் பெயரால் அநீதி அக்கிரமத்தில் அதிகரித்தும் உள்ளனர். இந்நிலையில் அல்லாஹ்வின் கட்டளைகளை முன்னிறுத்தியவாறு தம்மையும் சீர்திருத்திக் கொண்டு, உலகத்தையும் சீர்திருத்துவதற்கு முயற்சி செய்வதே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களின் கடமையாகும்; பொறுப்பாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் அவனுடனும், அவன்

படைப்பினங்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளான். அதாவது, அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும், அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் செலுத்துங்கள். உங்களால் அதற்கு மேற்பட்டு செய்ய முடிந்தால் நீதியுடன் நடந்து கொள்வது மட்டுமல்லாமல், அதிக நன்மை புரியுங்கள். அதாவது கடமையை விட அதிகமாகவும், நீங்கள் இறைவனைப் பார்க்கின்றீர்கள் என்பது போன்றும், மிகவும் களங்கமற்றத் தன்மையுடனும் இறைவனை வணங்குங்கள்.

முதலிலோ அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் பற்றி கூறினான். பின்னர் கூறுகின்றான்: இறைவனையும் நீங்கள் அவனைப் பார்ப்பதுபோன்று வணங்குங்கள். உரிமைகளையும் விட அதிகமாக மக்களுடன் நளினமாக நடந்து கொள்ளுங்கள். அதற்கும் மேற்பட்டு செய்ய முடிந்தால், (உள்) நோக்கமும், குறிக்கோளும் இன்றி, சொந்த ஆசைகளுக்கு அப்பாற்பட்டு, தன்னலமின்றி எந்த நோக்கமும் இல்லாமல், இறைவனை வணங்குங்கள். மேலும், அடியார்களுக்குத் தொண்டாற்றுங்கள்.

அதாவது, அல்லாஹ்வையும் தன்னலமின்றி வணங்குங்கள். எந்த நோக்கத்திற்காகவும் அல்லாஹ்வுக்கு முன் செல்லாதீர்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கான தொண்டு இருக்கின்றது. அதையும் ஒருவர் நெருங்கிய உறவின் உத்வேத்தால் செய்யும் அளவுக்குத் தன்னலமின்றி செய்யுங்கள். (ஷஹ்னயே ஹக், ரூஹானீ கஸாயீன், தொகுதி 2, பக்கம் 361 -362)

பின்னர், இந்த வசனத்துக்கு ஏற்ப அல்லாஹ்விற்கான உரிமையை செலுத்துவதன் பால் கவனமூட்டியவாறு, அன்னார் மேற்கொண்டு விளக்கமாக கூறியுள்ளார்கள்: அடியார்களுக்கான உரிமையை எப்படி நிறைவேற்ற வேண்டும்? என்பதையும் கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

முதல் அம்சத்தில் இந்த வசனத்தின் பொருளாவது, நீங்கள் உங்களைப் படைத்தவனுடன் அவனுக்குக் கட்டுப்படுவதில் நீதியான வழிமுறையை மேற்கொள்ளுங்கள். அநீதியிழைப்பவர்களாக ஆகாதீர்கள். எப்பொழுதும் இதைக் கருத்தில் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதில் எப்பொழுதும் நீதியான வழிமுறையைக் கையாளுங்கள்.

ஆக, உண்மையில் அவனையன்றி வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. அன்பு செலுத்தப்படுவதற்குத் தகுதியானவர் எவரும் இல்லை. நம்பி இருப்பதற்குத் தகுதியானவர் எவரும் இல்லை. ஏனெனில், படைப்பாளனாக, நிலைத்திருக்கச் செய்பவனாக மற்றும் சிறப்பாகப் பரிபாலிக்கக்கூடியவனாக இருக்கின்ற வகையில், ஒவ்வோர் உரிமையும் அவனுக்கே உரித்தானது. அல்லாஹ்வுடன் நீதியுடன் நடந்து கொள்வது என்பது என்ன? அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நடப்பது ஆகும்.

ஏன் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்? என்றால், அவன் நம்மைப் படைத்தவன் ஆவான். அவன் நிலைத்திருப்பவனும், நிலைத்திருக்கச் செய்பவனுமாவான். பரிபாலிக்கும் பண்பு அவனுடைய கையில் இருக்கின்றது. அவன் ரப் ஆவான். பரிபாலிப்பவன் ஆவான். நம்முடைய ஒவ்வொரு தேவையையும் நிறைவேற்றுபவன் ஆவான்.

எனவே அவனை நம்பி இருக்க வேண்டும். அவனை நேசிக்க வேண்டும். இந்த உரிமை அவனுக்கே உரித்தானது. இவ்வாறே, நீங்கள் அவனை வணங்குவதிலும், அவனை நேசிப்பதிலும் அவனது பரிபாலிக்கும் பண்பிலும், அவனுடன் எவரையும் இணையாக்கிக் கொள்ளாதீர்கள். இந்த அளவு நீங்கள் செய்துவிட்டால், இது நீதியாகும். அதை மேற்கொள்வது உங்கள் மீது கடமையாக இருந்தது.

இது அல்லாஹ்வின் விஷயத்தில் நீதியாகும். இதை செய்வது அவசியமாகும். பின்னர், இதிலிருந்து முன்னேற விரும்புகின்றீர்கள் என்றால், அதற்கு அடுத்த அடியை எடுத்து வைக்க வேண்டும் என்றால், இஹ்ஸான் - அதிக நன்மை புரிதல் எனும் படித்தரம் உள்ளது. அது நீங்கள் அவனுடைய மகத்துவம், கம்பீரம் மற்றும் என்றும் அழியாத அவனது அழகைப் பார்த்துவிட்டது போன்று அவனது மகத்துவத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்பதாகும். அந்த அளவு அவனுக்கு முன் உங்கள் இறை வணக்கங்களில் பண்பட்டவர்களாக ஆகிவிடுங்கள். அந்த அளவுக்கு அவன் மீதான அன்பில் உங்களை மாய்த்து விடுங்கள்.

அடுத்த படி, இஹ்ஸான் - அதிக நன்மை செய்தல் ஆகும். அல்லாஹ்வுக்கு மனிதன் அதிக நன்மை புரிய முடியாது. ஆனால், இங்கு இதன் பொருள் நீங்கள் அவனுடைய மகத்துவத்தையும் கண்டுவிட்டது போன்று அவனுடைய கம்பீரத்தையும் பார்த்துவிட்டது போன்று, அவனுடைய பண்புகளையும் படித்துவிட்டது போன்று என்றும் அழியாத அவனுடைய அழகையும் பார்த்து விட்டது போன்று அவனை வணங்குவதிலும், அவனுக்கு கண்ணியமும் மரியாதையும் அளிப்பதிலும், அவனை நேசிப்பதிலும், அவன் மீதான அன்பிலும் மிக அதிகமாக உங்களை மாய்த்துக் கொள்ளுங்கள் என்பதாகும்.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு, ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் எனும் படித்தரம் உள்ளது. அது உங்களுடைய இறை வணக்கம், உங்களுடைய நேசம் மற்றும் உங்களுடைய கீழ்ப்படிதல் ஆகியவற்றிலிருந்து செயற்கைத் தனமும், பாசாங்கும் முற்றிலும் அகன்று விட வேண்டும் என்பதாகும்.

முதலிலோ, அதிக நன்மை புரிதல் என்ற வகையில் நீங்கள் செய்து கொண்டிருப்பதில் செய்யும் முயற்சியில் சிறிதளவு சிரமம் மேற்கொள்ள வேண்டியது வரலாம். செயற்கையாக செய்ய வேண்டியது வரலாம். ஏதாவது முயற்சி செய்ய வேண்டியது வரலாம். ஆனால், அதற்குப் பிறகு செயற்கைத் தனமும் பாசாங்கும் முற்றிலும் அகன்று விடக்கூடிய அளவிலான ஒரு தரத்தை நீங்கள் அடைந்து விட வேண்டும். ஓர் உள்ளத்து உத்வேகத்துடனும் உணர்வுடனும் நீங்கள் அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவனுடைய மகத்துவத்தையும் கம்பீரத்தையும் அடையாளம் காணக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் மூதாதையர்களை நினைவு கூர்வது போன்று, மனதின் தொடர்பால் அவனை நினைவு கூர வேண்டும். ஒரு குழந்தை தன் அன்பிற்குரிய தாயை நேசிப்பது போன்று உங்களுக்கு அவன் மீது அன்பு இருக்க வேண்டும்.

பிறகு கூறினார்கள்: இரண்டாவது அம்சத்தில், அடியார்களுக்கான உரிமையை செலுத்துதல் தொடர்பான அனுதாபம் உள்ளது. மனித குலத்தோடு தொடர்புடைய வகையில், இந்த வசனத்தின் பொருளாவது, உங்கள் சகோதரர்கள் மற்றும் மனித குலத்தோடு நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய உரிமைகளுக்கும் மேற்பட்டு அவர்களிடம் எதையும் வேண்டாதீர்கள். நீதியில் நிலைத்து நில்லுங்கள். நீதியை நிலைநாட்டுங்கள். உங்களுடைய உரிமை உள்ள அளவிற்கு நீங்கள் அவர்களிடம் தாராளமாகக் கேளுங்கள்.

ஆனால், நீதியில் நிலைநின்றவாறு கேளுங்கள். தவறான வகை கோரிக்கையாக இருக்கக் கூடாது.

இந்தப் படித்தரத்திலிருந்து முன்னேற விரும்பினீர்கள் என்றால், இதற்கு அடுத்து இஹ்ஸான் - அதிக நன்மை புரிதல் எனும் படித்தரம் உள்ளது. அது நீங்கள் உங்கள் சகோதரரின் தீமைக்கு நிகரில் நன்மை புரிய வேண்டும் என்பதாகும். யாராவது உங்களுடன் தவறாக நடந்து கொண்டால் நீங்கள் அவருக்கு நன்மை செய்யுங்கள். இது இஹ்ஸான் ஆகும். அவர் (உங்களுக்குத்) துன்பமிழைத்ததற்குப் பகரமாக நீங்கள் அவருக்கு நிம்மதியைக் கொடுங்கள். அவர் உங்களுக்குத் துன்பம் கொடுத்தால் நீங்கள் அவருக்கு நிம்மதியைக் கொடுங்கள். அவருக்கு மகிழ்ச்சி அளிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். நல்ல முறையில் நடத்தல் மற்றும் அதிக நன்மை புரிதல் என்ற வகையில் உதவுங்கள்.

இதற்குப் பிறகு, ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்கு கொடுப்பதைப் போன்று கொடுத்தல் எனும் படித்தரம் உள்ளது. அது நீங்கள் எந்த அளவு உங்களுடைய சகோதரருக்கு நன்மை பயக்கின்றீர்களோ அல்லது எந்த அளவு மனிதகுலத்திற்கு நன்மையை செய்தாலும், அதன் மூலம் எந்தவொரு மற்றும் எவ்விதமான கைமாறான நன்மையையும் எதிர்பார்க்கக் கூடாது என்பதாகும்.

அதன் மூலம் எந்த, எவ்விதமான நன்மையும் அவர் எதிர்பார்க்கக் கூடாது. எந்த நன்மையும் நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக, இயல்பாகவே எந்தவொரு நோக்கமும் முன் இல்லாமல் நீங்கள் அதனை செய்ய வேண்டும். இயல்பாக நடக்கக்கூடிய பணியை செய்யுங்கள். அதிக உறவு நெருக்கத்தின் உத்வேகத்தால், ஒரு நெருங்கிய உறவினர் மற்ற உறவினருக்கு நன்மை செய்வது போன்று செய்ய வேண்டும். ஓர் உறவினர் மற்றொரு உறவினருக்கும், ஒரு நெருக்கமானவர் (தனக்கு) நெருக்கமான மற்றவருக்கும் நன்மை செய்வது போன்று நன்மை செய்யுங்கள்.

எந்த நோக்கமும் இருக்கக்கூடாது. மாறாக, உள்ளத்து உத்வேகம் இருக்க வேண்டும். எனவே, இது நல்லொழுக்க முன்னேற்றத்தின் இறுதி எல்லையாகும். அதாவது, படைப்பினங்கள் மீது அனுதாபம் காட்டுவதில் தன்னலமான எந்தவொரு எதிர்ப்போ, நோக்கமோ, குறிக்கோளோ இடையில் இருக்கக்கூடாது. மாறாக, சகோதரத்துவம் மற்றும் மனித நெருக்கத்தின் உத்வேகம் எந்த அளவு உயர்தரத்தில் வளர்ச்சி அடைந்து விட வேண்டும் என்றால், தானாகவே எந்த செயற்கையும் இன்றி, எவ்வித நன்றி செலுத்துதலுக்கான அவாவும் கொள்ளாமல், அதாவது எவ்வித நன்றி செலுத்துதலுக்கான ஆசையும் கொள்ளாமல் அல்லது துஆ செய்தல் அல்லது வேறு எவ்வகையான விளைவுக்கும் ஆசைப்படாமல் அந்த நன்மை வெறும் இயல்பின் உத்வேகத்தால் வெளிப்பட வேண்டும். (இஸாலாயே அவ்ஹாம், பாகம் 2, ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 550 -552)

ஒருவர் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் அல்லது உங்களுக்காக ஒருவர் துஆ செய்ய வேண்டும் அல்லது வேறு யாரிடமிருந்தாவது உங்களுக்கு ஏதாவது நன்மைக்கான ஆசை என்று எவ்விதமான ஆசையும் உங்களுக்கு இருக்கக் கூடாது. மாறாக, அவருடனான நெருக்கத்தின் தொடர்பின் காரணமாக மட்டுமே இந்தப் பணி நடைபெற வேண்டும். ஆக, இந்த அணுகுமுறையைத் தான் நாம் முதலில் ஒருவர் மற்றவருடன் மேற்கொள்ள வேண்டும். பிறகு, அதை விரிவுபடுத்தியவாறு மற்றவர்கள் வரை எட்ட வைக்க வேண்டும்.

பிறகு, அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாக மேற்கொண்டு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வுக்கான உரிமை என்ற கோணத்தில் இந்த வசனத்தின் பொருள் இதுவாகும்; நீதியைக் கடைபிடித்தவாறு இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பாயாக! எவன் உன்னைப் படைத்தானோ உன்னை பரிபாலித்தானோ, எல்லா நேரமும் பரிபாலித்துக் கொண்டே இருக்கின்றானோ அவனுக்கு நீ கட்டுப்படுவதும் அவனுக்கான உரிமையாகும். அல்லாஹ் உங்களைப் படைத்தான். பரிபாலித்தான். பரிபாலித்துக் கொண்டும் இருக்கின்றான். உலகத்திற்கான ஏற்பாடுகளையும் செய்து தருகின்றான். எனவே, நீங்கள் அவனுக்குக் கட்டுப்படுவது அவனுக்கான உரிமையாகும். இதைவிட அதிகமாக உங்களுக்கு அகப்பார்வை இருக்கின்றது என்றால், பின்னர் நீங்கள் உரிமையை நிறைவேற்றுவதற்காக மட்டுமல்லாமல் அதற்கும் மேற்பட்டு அதிக நன்மையை கடைபிடித்தவாறு அவனுக்குக் கட்டுப்படுங்கள்.

முதலிலோ நீதி இருக்கின்றது. அதாவது, அவன் நம்மைப் படைத்தான்; நம்முடைய தேவைகளை நிறைவேற்றுகின்றான்; எனவே, நாம் அவனுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். இன்னும் சொல்வதாயின், அடுத்த நிலை அல்லாஹ் புரிந்த அதிகமான பேரருளுக்காக அவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பாயாக! ஏனெனில், அவன் பேரருள் புரிபவன் ஆவான். அவனுடைய பேரருள்கள் எண்ண முடியாத அளவுக்கு அதிகமாக இருக்கின்றன. அல்லாஹ் உங்கள் மீது புரிந்த பேரருள்களை எண்ண ஆரம்பியுங்கள். பின்னர், அவன் உங்கள் மீது புரிந்த பேரருள்களுக்குக் கட்டுப்படுங்கள். இதுதான் இஹ்ஸான் என்பதன் தரமாகும். மேலும், கட்டுப்படும் பொழுது அதிக நன்மையும் கருத்தில் கொள்ளப்படும் அந்தத் தரமானது அத்ல் - நீதி என்ற தரத்தை விட மேலான படித்தரம் ஆகும் என்பது வெளிப்படையான விஷயம்.

ஏனெனில், மனிதன் எந்நேரமும் படிப்பதும், பார்ப்பதும் பேரருள் புரிபவரின் தோற்றத்தையும் உயர்ந்த பண்புகளையும் எப்பொழுதும் கண்முன் கொண்டு வருகின்றது. எனவே இறைவனைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று இறைவணக்கம் செய்யும் விஷயம் இஹ்ஸான் என்பதற்கான இலக்கணத்தில் உள்ளது.

எனவே அதிக நன்மை என்ற வகையில் இருக்கும்பொழுது, அதிக நன்மை என்பது யாதெனில், முஹ்ஸின் அதாவது பேரருள் புரிந்தவனாகிய, அல்லாஹ்வுக்கோ அதிக நன்மை செய்ய முடியாது. அல்லாஹ் புரிந்த பேரருள்களை நினைவு கூருவது மனிதனை அதிக நன்மை செய்யக்கூடியவனாக ஆக்குகின்றது.

அல்லாஹ் புரிந்த பேரருள்களை நினைவு கூருவதற்காக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அதற்கான வழிமுறை என்னவென்றால், யாராவது உங்களுக்கு அதிக நன்மை செய்கிறார் என்றால், அவருடைய தோற்றம், அவருடைய தனிச்சிறப்புகளும் உங்கள் முன்னால் வந்துவிடுகின்றன.

ஆக, அவை முன் வந்துவிடும்பொழுது பிறகு அவனுடன் உங்களுடைய உள்ளத் தொடர்பு ஒன்று உருவாகிவிடுகின்றது. பிறகு, அல்லாஹ்வின் விஷயத்தில் இந்தத் தொடர்பு உருவாகும்போது, பிறகு நீங்கள் களங்கமற்றவர்களாக ஆகி அவனை வணங்குவீர்கள். நீங்கள் இறைவழிபாடு செய்யும்போது நீங்கள் இறைவனைப் பார்க்கின்றீர்கள் என்ற சிந்தனை உங்களது உள்ளத்தில் உருவாகும் அளவுக்கு உங்கள் மூளையில் உதிக்கும் அளவுக்கு அந்த இறைவழிபாடு இருக்கும்.

பின்னர், அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவனை வணங்குபவர்கள் உண்மையில், மூன்று வகைப்படுவார்கள். முதலாவது, திரையின் காரணமாகவும், காரணிகளைப் பார்ப்பதன் மூலமாகவும் இறைவனின் பேரருளை நன்றாக பார்க்காத மக்கள் ஆவர். அவர்கள் மீது திரை இருக்கின்றது. எனவே, அல்லாஹ்வின் பேரருள்களை அவர்களால் சரியாகப் பார்க்க முடியாது; அறிய முடியாது. அந்த உத்வேகமும் அவர்களிடம் ஏற்படுவதில்லை. அறிய முடியாது என்பதனால் பேரருள்களின் மகத்துவத்தின் மீது பார்வையை செலுத்துவதனால் உருவாகின்ற அந்த உத்வேகமும் உருவாகுவதில்லை.

பேரருள் புரிந்தவனின் மாபெரும் அருட்கொடைகளை எண்ணிப் பார்த்து இயங்கக் கூடிய அந்த அன்பும் அவர்களிடம் உருவாகுவதில்லை. அல்லாஹ்வைப் பற்றிய சரியான மனத்தோற்றமே உருவாகாத போது அவனுடைய தோற்றமே முன் வராத போது அவன் புரிந்த பேரருள்கள் பற்றிய சிந்தனையே உருவாகாத போது, உண்மையில் அல்லாஹ்வின் பரிபாலிக்கும் பண்பைப் பற்றி மனிதன் சிந்திக்கவே சிந்திக்காதபோது பிறகு, அந்த உத்வேகம் உருவாக முடியாது.

அது பேரருள் புரிந்தவனின் மாபெரும் அருட்கொடைகளை எண்ணிப் பார்ப்பதால் உள்ளத்தின் தன்மை அசைவில் வர ஆரம்பிக்கின்றது. பேரருள் புரிந்தவனின் மாபெரும் அருட்கொடைகளை எண்ணிப் பார்ப்பதால் உள்ளத்தில் அந்த நிலை உருவாகின்றது. அது போன்ற நிலை பின்னர் உருவாகாது. மாறாக, மேலோட்டமாக இறைவனின் படைக்கும் பண்புகள் முதலியவற்றை ஏற்றுக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மக்கள், ஆமாம்! அல்லாஹ் படைப்பாளன்தான். அவன் நம்மைப் படைத்தான் தான் என்று அல்லாஹ்வின் படைக்கும் பண்பை ஒரு மேலோட்டமாக ஏற்றுக் கொள்கின்றார்கள்.

ஆனால், அவர்களுக்கு அதன் ஆழத்தைப் பற்றிய ஞானம் இருப்பதில்லை. இறைவனின் பேரருள்கள் - எவற்றின் மீது ஆழிய பார்வையை செலுத்துவது அந்த உண்மையான படைப்பாளனைக் கண்ணுக்கு முன் கொண்டு வந்துவிடுகிறதோ அந்த விளக்கங்களை அவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை.

அல்லாஹ் படைப்பாளனாக இருப்பதற்கான உரிமை நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றது? என்பதை ஆழ்ந்து பார்ப்பதில்லை. அதை ஆழமாகப் படிப்பதில்லை. ஏனெனில், காரணிகளை வணங்குதல் எனும் தூசு, துகள் காரணிகளை ஏற்படுத்தும் உண்மையானவனின் தோற்றத்தைப் பார்ப்பதை விட்டும் தடுத்து விடுகிறது. அவர்கள் மீது உலகக் காரணிகள் எனும் மாசு படிந்துள்ளது; புழுதி படிந்துள்ளது. அதன் காரணமாக அவர்களுக்கு அல்லாஹ்வின் சரியான தோற்றம் தென்படுவதில்லை. எனவே எந்தப் பார்வை மூலமாக உண்மையான வழங்கக் கூடியவனின் அழகைப் பார்க்க முடியுமோ அந்தத் தூய பார்வை அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

வழங்கக் கூடியவனான, உண்மையான வழங்கக் கூடியவனான அவனது அழகின் மீது பார்வையை செலுத்தவோ அவனைப் பார்க்கவோ அவர்களால் முடியாது. அவர்களுக்குப் பார்வை கிடைப்பதே இல்லை. அவர்களின் குறைவான ஞானமானது காரணிகளை முன்னிறுத்துதல் என்ற களங்கம் உடையதாக இருக்கின்றது. அல்லாஹ்வைப் பற்றி அவர்களுக்கு எந்த அளவு ஞானம் இருக்கின்றதோ ஓரளவு அறிந்திருக்கின்றனரோ அதன் காரணமாக சிலவேளை தொழுகின்றனர். சிலவேளை தொழுவதில்லை. சிலவேளை உரிமையை நிறைவேற்றுகின்றனர். சிலவேளை நிறைவேற்றுவதில்லை. அதில் காரணிகள் எனும் மாசு கலந்திருக்கின்றது.

உலகப் பொருட்கள், உலகக்

காரணிகள், உலக ஆசைகள் ஆகியவை கலந்துவிடுகின்றன. எனவே அவற்றால் அல்லாஹ்வின் தோற்றத்தை சரிவர காட்ட முடியாது. அவர்களால் இறைவனின் பேரருள்களை சரியாகப் பார்க்க முடியாது என்பதனால் பேரருள்களைப் பார்க்கும்போது செலுத்த வேண்டி வருகின்ற அந்தக் கவனத்தை தாமும் அவன் பக்கம் செலுத்துவதில்லை. பேரருள் புரிந்தவனின் தோற்றம் கண்ணுக்கு முன் வந்து விடுவதற்கான அந்த முழுமையான கவனமே அவன் பக்கம் இல்லை. மாறாக, அவர்களின் இறைஞானம் ஒரு மங்கலான பொருளைப் போன்று இருக்கின்றது. இன்னும் சொல்வதாயின், முற்றிலும் மங்கிப் போயிருக்கின்றது. அவர்களுக்கு சரியான முறையில், தெளிவாக அல்லாஹ்வின் முகம் தென்படுவதே இல்லை. காரணம், அவர்கள் சிறிது தமது உழைப்பின் மீதும் தம்முடைய காரணிகள் மீதும் நம்பிக்கை வைக்கின்றார்கள். சிறிது சிரமம் மேற்கொண்டு இறைவன் படைப்பாளனாக இருப்பதற்கான உரிமையும் உணவளிப்பதற்கான உரிமையும் நம் தலை மீது கடமையாக உள்ளது என்பதையும் ஏற்கின்றனர். அவர்களுக்குத் தெளிவாகத் தெரியவே இல்லை. சிறிது அளவு அவர்கள் நம்புவதாவது, ஆம்! நாம் இந்த வேலையை செய்தோம். இது நமது அறிவாக இருந்தது. அதன் காரணமாக நம்முடைய இந்தப் பணிகள் நடந்துவிட்டன என்று அதன் மீது நம்பிக்கை இருக்கும். அத்துடன் மார்க்க சூழலில் இருப்பதனால் ஓரளவு அதற்கான தாக்கமும் இருக்கின்றது. அல்லாஹ்வின் படைக்கும் பண்பு குறித்து, அல்லாஹ் நம்மைப் படைத்தான்; அல்லாஹ் நமக்கு உணவளித்தான்; நமக்காக நாம் வளர்வதற்கான ஏற்பாடுகளை செய்தான்; ஆகிய விஷயங்களும் சிந்தனையில் இருக்கும். ஆக, (இரண்டும்) கலந்த நிலைமை இருக்கின்றது. இந்தக் கலவையான நிலையில் அவரால் உண்மையான முறையில் இறைவனின் தோற்றத்தைப் பார்க்க முடியாது. இறைவன் மனிதனுக்கு அவனுடைய புரிதலின் வட்டத்தை விட அதிகமாக சிரமம் அளிக்க மாட்டான். எனவே அவன் அவர்கள் இந்த நிலையில் இருக்கும் வரை அவனுடைய உரிமைகளுக்கான நன்றி செலுத்துவதையே விரும்புகின்றான்.

மேலும், إِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ என்ற வசனத்தில் அத்ல் - நீதி என்பது நீதியைக் கடைபிடித்தவாறு (மேற்கொள்ளும்) இந்தக் கட்டுப்படுதலையே குறிக்கின்றது. பின்னர், இங்கே அல்லாஹ்வின் ரஹ்மான் எனும் பண்பு உதவுகிறது. அவர்கள் எப்படிப்பட்ட மக்கள் என்றால், அவர்களால் முழுமையான முறையில் அல்லாஹ்வின் முகத்தைப் பார்க்கவும் முடியாது. அவர்களுடனும் அல்லாஹ் கருணையுடன் நடந்து கொள்கின்றான். அவர்களின் இந்த நிலையையும் ஏற்றுக் கொள்கின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆனால், இதற்கும் மேற்பட்டு மனிதனின் இன்னொரு தரம் இருக்கின்றது. இதுவோ நீதியாகும். இது அடிப்படை விஷயமாகும். இது ஒரு முஸ்லிமின் குறைந்தபட்ச தரமாகும். ஆனால், இதற்கும் மேற்பட்டு மனிதனின் இறைஞானத்தின் தரம் இருக்கின்றது. அது என்னவென்றால், நாம் ஏற்கனவே கூறிவிட்டது போன்று, மனிதனின் பார்வை காரணிகளைப் பார்ப்பததை விட்டு முற்றிலும் தூய்மையானதாகவும், பரிசுத்தமானதாகவும் ஆகி, இறைவனின் கருணை மற்றும் பேரருளின் கையைப் பார்த்து விடுகின்றது. வெறும் இந்த உலகக் காரணிகள் மீது நம்பிக்கை இருப்பதில்லை. மாறாக, முழு நம்பிக்கையும் அல்லாஹ்வின் மீது இருக்கின்றது.

மேலும், இவ்வாறான சில பழமைப் பேச்சுகள், அதாவது உதாரணமாக நான் நீர் பாய்ச்சியதனால் எனது வயல் வளர்ந்தது அல்லது என்னுடைய கையாலேயே எனக்கு இந்த வெற்றி கிடைத்தது. அல்லது இன்னொருடைய கருணையால் இன்ன நோக்கம் நிறைவேறியது. இன்னார் செய்தி தெரிவித்ததால் நான் அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டேன் போன்ற இந்த அனைத்து விஷயங்களும் ஒன்றுமற்றதாகவும் பொய்யானதாகவும் தெரிய வருகின்றன.

தனது எந்த ஒரு சிறப்பையோ அல்லது முயற்சியையோ (மனிதன்) சார்ந்தும் இருப்பதில்லை. வேறு எவருடைய உதவியையோ, சிறப்பையோ சார்ந்தும் இருப்பதில்லை. அனைத்தும் சாதாரணமானவையாக ஆகிவிடுகின்றன. ஒரே ஒருவன், ஒரே ஆற்றல் ஒரே பேரருள் புரிபவன் மற்றும் ஒரே கரம் தென்படுகின்றது. அப்பொழுது, மனிதன் காரணிகளை இணையாக வைத்தல் எனும் தூசு, துகள் ஓர் அணுவளவும் அல்லாத ஒரு தூய பார்வையால் இறைவனின் பேரருள்களைப் பார்க்கின்றான்.

இவ்வாறு அல்லாஹ் தென்பட ஆரம்பித்து விடும்பொழுது பிறகு, மனிதன் அல்லாஹ்வின் பேரருள்களைப் பார்க்கின்றான். மேலும், இந்தப் பார்வை எந்த அளவு தூய்மையானதாகவும் உறுதிவாய்ந்ததாகவும் இருக்கின்றது என்றால், அவன் அத்தகைய பேரருள் புரிபவனை வணங்கும்போது அவனை மறைவானவனாகக் கருதுவதில்லை. மாறாக, நிச்சயமாக அவனைத் தன் முன் இருப்பவனாக நினைத்து அவனை வணங்குகிறான்.

பிறகு, மனிதன் இபாதத் செய்தாலும் சரி! தொழுதாலும் சரி பிறகு, அல்லாஹ்வை தன் முன் இருப்பதாகக் கருதுகின்றான். இந்த இறைவணக்கத்திற்குத்தான் திருக்குர்ஆனில் இஹ்ஸான் என்று பெயராகும். இறைவன் முன்னால் இருப்பதுபோன்று அல்லாஹ்வுக்கு முன்னால் ஸஜ்தா செய்வதாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதைத் தான் திருக்குர்ஆன் அல்லாஹ்வின் விஷயத்தில் (செய்யப்படும்) இஹ்ஸான் என்று கூறுகின்றது. ஸஹீஹ் புகாரியிலும், முஸ்லிமிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுமே இஹ்ஸான் என்பதற்குப் இந்தப் பொருளைத்தான் கூறியுள்ளார்கள்.

பிறகு, இங்கே விஷயம் முடிந்துவிடவில்லை. மாறாக, மேற்கொண்டு கூறுகின்றார்கள்: மேலும், இந்தப் படித்தரத்திற்குப் பிறகு இன்னொரு படித்தரம் இருக்கின்றது. அதற்கு ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போல கொடுத்தல் என்று பெயர்.

அதனுடைய விளக்கம் என்னவென்றால், மனிதன் ஒரு நீண்ட காலம் வரை இறைவனின் பேரருள்களைக் காரணிகளின் கலப்படம் இன்றி, பார்த்து வரும்பொழுது அதாவது, அல்லாஹ்வுடைய பேரருள்களை உலகக் காரணிகள் எதுவும் இன்றி, அல்லாஹ்வின் மீது மட்டுமே முழுமையான நம்பிக்கை இருக்கும் பொழுது அவனை முன்னால் இருப்பவனாகவும் நேரடியாக பேரருள் புரிபவனாகவும் புரிந்து அவனை வணங்கி வரும்போது, இந்த மனத்தோற்றம் மற்றும் சிந்தனையின் இறுதி விளைவாக, அவனுக்கு இறைவன் மீது ஒரு சொந்த அன்பு உருவாகிவிடும்.

பிறகு, அல்லாஹ்வுடன் ஒரு சொந்த அன்பு உருவாகி விடும். அவனுக்கு எந்த ஒரு (உள்)நோக்கமும் இருக்காது. எனக்கு இது தேவை என்று எந்த ஒரு விஷயத்தையும் கேட்க வேண்டி இருக்காது. மாறாக, ஒரு சொந்த அன்பு உருவாகி விடும். ஏனெனில், தொடர்ச்சியாக அதிக நன்மைகளை நிரந்தரமாகப் பார்த்து வருதல், தேவையின் போது, நன்றிக் கடன்பட்டவரின் உள்ளத்தில், சிறிது சிறிதாக எந்த நபர் அதிக நன்மை செய்திருப்பாரோ அந்த நபர் மீதான சொந்த அன்பால் நிறைந்து விடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தொடர்ச்சியான பேரருள்களுக்கான உணர்வு, அதை பார்வையிடுவது, அதாவது, அல்லாஹ் எவ்வாறு பேரருள் புரிகின்றான் என்று அதைப் பார்த்துக் கொண்டிருப்பது., அதற்கான புரிதலும் அதைப் பற்றிய இறை ஞானமும் உருவாகிவிடுதல், பிறகு என்ன ஆகிறது? அதன் மூலம் அல்லாஹ்வுடன் ஒரு தனிப்பட்ட அன்பு உருவாகிவிடுகின்றது. ஏனெனில், இவ்வாறான தொடர்பு இருந்தால் ஒரு தனிப்பட்ட அன்பால் உள்ளம் நிறைந்துவிடுகின்றது என்பது அடிப்படை விஷயமாகும்.

அவனுடைய எல்லையற்ற பேரருள்கள் அந்த மனிதனை சூழ்ந்து கொண்டன. எனவே, இந்த நிலையில் அவன் வெறும் பேரருள்களைக் கண் முன்னிறுத்தி மட்டுமே அவனை வணங்குவதில்லை. அதற்கும் மேற்பட்டு, அவன் மீதான தனிப்பட்ட நேசம் மனிதனின் உள்ளத்தில் பதிந்து விடுகின்றது.

முதலில் வேண்டுவதற்காக இறைவணக்கம் செய்தல் பின்னர், அல்லாஹ்வையே அனைத்துமாகக் கருதி அவனை வணங்குவது, புரிந்து கொள்வது, இஹ்ஸான் என்ற வடிவில் ஆகிவிட்டது. பின்னர், அதை விட அதிகம் முன்னேறி விடுவது. அதாவது எதையும் கேட்பதற்காக இறைவணக்கம் செய்வதில்லை. மாறாக, ஒரு குழந்தைக்குத் தன் தாயுடன் இருக்கும் சொந்த அன்பைப் போன்று அல்லாஹ்வுடனான சொந்த அன்பின் காரணமாக அவர் அல்லாஹ்வை நினைவு கூருகிறார். அதன் காரணமாக அவர் அல்லாஹ்வை வணங்குகின்றார்.

எனவே, இந்தப் படித்தரத்தில் அவர் இபாதத் செய்யும் போது இறைவனைப் பார்ப்பது மட்டுமல்ல. அதற்கும் மேற்பட்டு பார்த்துவிட்டு உண்மையான நேசர்களைப்

போன்று இன்பமடையவும் செய்கின்றனர். தன்னலமான நோக்கங்கள் அனைத்தும் எதுவும் இல்லாமல் ஆகி அவருக்குள் சொந்த அன்பு உருவாகி விடுகின்றது. இந்தத் தரத்தைத் தான் இறைவன் ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்று கூறி இருக்கின்றான். இதையே இறைவன் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டியுள்ளான்:

فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا

எனவே நீங்கள் அல்லாஹ்வை உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூருவது போன்று இன்னும் சொல்லப்போனால் அதையும் விட அதிகமாக நினைவு கூருங்கள். (2:201)

எனவே இதுதான் அல்லாஹ்வுடன் தூய அன்பு கொண்டிருப்பதற்கான தரமாகும்.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

சுருக்கமாக,

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآئِ ذِى الْقُرْبٰى

என்ற வசனத்தின் விளக்கம் இதுவாகும். இதில் இறைவன் மனிதனின் இறை ஞானத்திற்கான மூன்று படித்தரங்களை எடுத்துக் கூறி விட்டான். மூன்றாவது படித்தரத்தை சொந்த அன்பு எனும் படித்தரமாகக் கூறிவிட்டான். இந்தப் படித்தரத்தில்தான் மனதின் நோக்கங்கள் அனைத்தும் எரிந்து விடுகின்றன. ஒரு கண்ணாடிக் குடுவை நறுமண திரவியத்தால் நிறைந்திருப்பது போன்று அதாவது, வாசனை திரவியத்தின் குடுவையைப் போன்று உள்ளம் அன்பால் நிறைந்துவிடுகின்றது. இந்தத் தரத்தைப் பற்றியே இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது:

وَمِنَ النَّاسِ مَنْ يَّشْرِىْ نَفْسَهُ ابْتِغَآءَ
مَرْضَاتِ اللّٰهِ وَاللّٰهُ رَءُوْفٌ بِالْعِبَادِ

அதாவது, நம்பிக்கை கொண்டவர்களில் எப்படிப்பட்ட சிலரும் இருக்கின்றனர் என்றால், அவர்கள் இறை விருப்பத்தைப் பெறுவதற்காக தங்களுடைய உயிர்களை விற்று விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் மீதுதான் இறைவன் கருணை புரிகின்றான். (2:208)

பின்னர் கூறுகின்றான்:

بَلٰى مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗٓ اَجْرُهٗ
عِنْدَ رَبِّهٖ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

அதாவது, எவர்கள் தம்மை இறைவனிடம் ஒப்படைத்து விடுகின்றார்களோ அவர்கள் ஈடேற்றம் அடைந்தவர்கள் ஆவர். இறைவனுடைய அருட்கொடைகளைக் கண் முன்னிறுத்திய வண்ணம் அவனைப் பார்ப்பது போன்று அவனை வணங்க வேண்டும். ஆக, அத்தகைய மக்கள் இறைவனிடமிருந்து நற்கூலி பெறுகின்றார்கள். அவர்களுக்கு எந்த அச்சமும் இல்லை; அவர்கள் எந்த வேதனையும் அடைவதில்லை. (2:113)

அதாவது, இறைவன் மற்றும் இறைவனுடைய அன்பு அவர்களின் குறிக்கோளாக ஆகிவிடுகின்றது. இறைவனிடம் உள்ள அருட்கொடைகள் அவர்களின் வெகுமதியாக ஆகிவிடுகின்றது.

பிறகு, ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

يُطْعِمُوْنَ الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسْكِيْنًا وَّ يَتِيْمًا وَّ اَسِيْرًا ۔
اِنَّمَا نُطْعِمُكُمْ لِوَجْهِ اللّٰهِ لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّ لَا شُكُوْرًا

எனவே இறைவன் மீதான நேசத்தில் ஏழைகள், அனாதைகள் மற்றும் கைதிகளுக்கு உணவளிப்பவர்களே நம்பிக்கை கொண்டவர்கள் ஆவர். நாங்கள் இவ்வாறு உணவளிப்பதனால் உங்களிடம் இருந்து எந்தக் கைமாறும், நன்றி செலுத்துவதையும் எதிர்பார்ப்பதும் இல்லை. (72:9-10)

எங்களுக்கு எந்த நோக்கமும் இல்லை. இந்த அனைத்து தொண்டுகள் மூலம் இறைவனின் தோற்றத்தைப் பார்ப்பது மட்டுமே எங்களது நோக்கமாகும் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

அதாவது, அல்லாஹ் எங்கள் மீது திருப்தி அடைந்துவிட வேண்டும். அல்லாஹ் எங்களுக்கு மேற்கொண்டு தென்பட வேண்டும் என்பது மட்டுமே இந்தத் தொண்டுகளையும் ஆற்றுவதன் நோக்கமாகும்.

இப்பொழுது சிந்தித்துப் பார்க்க வேண்டும்! இந்த அனைத்து வசனங்களிலிருந்தும் எந்த அளவு தெள்ளத் தெளிவாக தெரிய வருகின்றது! அதாவது இறை வணக்கம் மற்றும் இறை திருப்தியை வேண்டுதல் உண்மையான உள்ளத்துடன் வெளிப்பட வேண்டும் என்பதையே திருக்குர்ஆன் போதிக்கின்றது. இந்த வசனங்களிலும் கூறப்பட்டுள்ளது போன்று அல்லாஹ்வின் உண்மையான நேசத்தைப் பெறுவதற்கு அவனுடைய படைப்பினங்களோடும் தனிப்பட்ட அனுதாபத்தையும் தொடர்பையும் உருவாக்க வேண்டும். (நூருல் குர்ஆன்,எண்:2, ரூஹானீ கஸாயீன், தொகுதி 9, பக்கம் 437 -441)

அவர்களுக்கான உரிமையை ஒரு நம்பிக்கையாளரான அடியாரால், அல்லாஹ்வை நேசிக்கக் கூடிய அடியாரால் சரியான முறையில் நிறைவேற்ற முடியும்; நிறைவேற்றவும் செய்கின்றார்.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் உங்களிடம் என்ன எதிர்பார்க்கின்றான்? நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் அன்னார் (அலை) அறிவுரை வழங்கியவாறு இதைக் கூறியுள்ளார்கள்:

நீங்கள் முழு மனித குலத்துடனும் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். பிறகு, அதற்கும் மேற்பட்டு எவர்கள் உங்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லையோ அவர்களுக்கும் நன்மை செய்யுங்கள். பிறகு அதற்கும் மேற்பட்டு, இறைவனின் படைப்பினங்களுடன் நீங்கள் அவர்களின் நெருங்கிய உறவினர்களைப் போன்று தாய்மார்கள் பிள்ளைகளோடு நடந்து கொள்வதைப் போன்று அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

ஏனெனில், அதிக நன்மை புரிதலில் தன்னை வெளிப்படுத்தும் ஓர் இயல்பும் மறைவாக இருக்கும். அதிக நன்மை புரிபவர் சிலவேளை தனது நன்மைகளை சொல்லிக் காட்டியும் விடுகின்றார். ஆனால், தாயைப் போன்று இயல்பான உத்வேகத்தோடு நன்மை செய்பவர் ஒருபோதும் தன்னை வெளிப்படுத்த மாட்டார். எனவே, நன்மைகளின் இறுதி படித்தரம், தாயைப் போன்று இருக்கக்கூடிய இயல்பான உத்வேகம் ஆகும்.

இந்த வசனம் படைப்பினங்கள் தொடர்பானது மட்டுமல்ல. அதற்கு மேற்பட்டு, இறைவன் தொடர்பாகவும் வருகின்றது. இறைவனுடன் நீதியுடன் நடந்து கொள்வது என்பது, அவனுடைய அருட்கொடைகளை நினைவுகூர்ந்து அவனுக்கு கட்டுப்படுவதாகும். இறைவனுக்கு அதிக நன்மை புரிவதன் பொருள் என்பது அவனைப் பார்ப்பது போன்று அவன் மீது நம்பிக்கை கொள்வது ஆகும். இறைவனுடன், உறவினர்களுக்கு வழங்குவதைப் போன்று வழங்குதல் என்பதன் பொருள், அவனை வணங்குவது சொர்க்கத்தின் மீதான ஆசையினாலும் இருக்கக் கூடாது. நரகத்தைப் பற்றிய அச்சத்தினாலும் இருக்கக் கூடாது. மாறாக, சொர்க்கமும் இல்லை நரகமும் இல்லை என்று கற்பனை செய்து கொண்டாலும் அப்போதும் அன்பின் உத்வேகத்திலும், கட்டுப்படுதலிலும் வித்தியாசம் ஏற்படக் கூடாது. (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 30-31)

இது இறைவனுடன் கொள்ளும் சொந்த அன்பாகும். முன்னர் கூறப்பட்ட விளக்கத்தின் சுருக்கம் இதுவாகும். இதை அன்னார் (அலை) நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமக்கு எடுத்துக் கூறி இருக்கின்றார்கள்.

பிறகு, அடியார்களுக்கான உரிமைகளின் பால் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) மேற்கொண்டு கூறுகின்றார்கள்: நீங்கள் நீதியோடு நடந்து கொள்ளுங்கள். நீதிக்கும் அதிகமாக, நீதியைக் கடைபிடிப்பது மட்டுமல்லாமல் அதிக நன்மை செய்யுங்கள். அதிக நன்மை புரிவதை விட அதிகமாக நீங்கள் மக்களுடன் அவர்கள் உங்களுடைய அன்பர்கள் என்பது போன்று நெருங்கிய உறவினர்கள் என்பது போன்று அன்புடன் நடந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான்.

இப்பொழுது சிந்தித்துப் பார்க்க வேண்டும்! மூன்றே மூன்று படித்தரங்கள்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

தான் இருக்கின்றன. முதலில் மனிதன் நீதியுடன் நடக்கின்றான். அதாவது உரிமைக்குப் பகரமாக உரிமையை வேண்டுகின்றான். பின்னர், அதைவிட அதிகரித்தால், இஹ்ஸான் - அதிக நன்மை என்ற படித்தரம் இருக்கின்றது. அதைவிட அதிகரித்தால், அதிக நன்மை என்பதையும் அவன் அலட்சியப்படுத்தி விடுகின்றான். மேலும், ஒரு தாய் தன் குழந்தை மீது அனுதாபம் காட்டுவதைப் போன்று, அந்த அளவுக்கு அன்புடன் மக்கள் மீது அனுதாபம் காட்டுகின்றான். அதாவது, அதிக நன்மை என்ற எண்ணத்தில் அல்லாமல் ஓர் இயல்பான உத்வேகத்தில் செய்கின்றான். (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 30-31) இது அடியார்களுக்கான உரிமைக்கான சுருக்கமாகிவிட்டது.

பின்னர், இதுவோ முதலில் சில இடங்களில் அன்னார் (அலை) மக்களுக்கு, அந்நிய மக்களுக்கு இஸ்லாத்தின் சிறப்புகள் யாவை? என்பதை எடுத்துரைத்தவாறு கூறிய விஷயங்கள் ஆகும். பிறகு, ஜமாஅத்திற்கும் அறிவுரைகளை அன்னார் (அலை) பல்வேறு சந்தர்ப்பங்களில் செய்துள்ளார்கள்.

ஒரு சந்தர்பத்தில் அறிவுரை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறினார்கள்:

படைப்பினங்களுடன் நீங்கள் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் என்பதைப் போன்று பழகுங்கள். இந்தப் படித்தரம் எல்லாவற்றையும் விட மேலானது. ஏனெனில், அதிக நன்மை புரிதலில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுதல் என்ற ஓர் இயல்பும் இருக்கின்றது. எவராவது (தனக்கு) செய்யப்பட்ட அதிக நன்மையை மறந்துவிட்டால், பிறகு நன்மை புரிந்தவர் உடனடியாக, நான் உனக்கு இன்ன இன்ன பெரும் நன்மைகளை செய்திருக்கின்றேன் என்று கூறி விடுகின்றார்.

ஆனால், தாய்க்குக் குழந்தையிடம் இருக்கக் கூடிய இயல்பான அன்பில், தன்னை வெளிப்படுத்துதல் எதுவும் இருக்காது. யாருக்காவது அதிக நன்மை புரிந்திருந்தால் சிலவேளை அதை சொல்லிக் காட்டியும் விடுகின்றீர்கள். ஆனால், தாய் ஒருபோதும் பிள்ளைக்கு சொல்லிக் காட்டுவதில்லை. இன்னும் சொல்வதாயின், ஓர் அரசர் , நீ இந்தக் குழந்தையைக் கொன்றுவிட்டாலும் உன்னிடம் எந்தக் கேள்வியும் கேட்கப்பட மாட்டாது என்று ஒரு தாய்க்கு கட்டளையிட்டாலும், அவள் ஒருபோதும் இந்த விஷயத்தைக் கேட்பதைப் பொறுத்துக் கொள்ள மாட்டாள். மேலும், அந்த அரசனைப் பழித்துரைப்பாள்.

ஆனால், அந்தக் குழந்தை இளைஞன் ஆவதற்குள் தான் மரணித்துவிடுவேன் என்று அவளுக்கு தெரிந்திருந்தாலும், அதன் பின்னரும் கூட சொந்த அன்பின் காரணமாக அவள் குழந்தையை வளர்ப்பதை நிறுத்த மாட்டாள். பெரும்பாலான தருணங்களில் தாய், தந்தையர் முதியவர்கள் ஆகிவிடுகின்றார்கள். அவர்களுக்குக் குழந்தை பிறக்கின்றது.

ஆக, வெளிப்படையில் அவர்களுக்கு சந்ததியிடமிருந்து பலன் பெறுவதற்கான எந்த ஒரு நம்பிக்கையும் இருப்பதில்லை. ஆனால், அவ்வாறு இருந்தாலும் அவர்கள் அதை நேசிக்கின்றனர்; வளர்க்கின்றார்கள். இது ஓர் இயல்பான விஷயமாக இருக்கின்றது. இந்தத் தரத்தை எந்த அன்பு எட்டிவிடுகிறதோ அதுவே ஈதாயிதில் குர்பா - உறவினர்களுடன் அன்பு கொள்வதைப் போன்று அன்பு கொள்ளுதல் என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளது. படித்தரங்களுக்கான ஆசையும் இல்லாமல், இழிவுக்கான அச்சமும் இல்லாமல், இதுபோன்ற அன்பு இறைவனுடன் இருக்க வேண்டும். (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 181 - 182, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்:

எவ்வளவு பெறுகின்றீர்களோ அவ்வளவே திருப்பிக் கொடுப்பது குறைந்த படித்தரத்தைக் கொண்ட நீதியாகும். எவ்வளவு பெறுகின்றீர்களோ அதே அளவு திருப்பிக் கொடுப்பது நீதியாகும். அதாவது இது நியாயத்திற்கான குறைந்தபட்ச படித்தரமாகும். இதைவிட முன்னேறும்பொழுது, இஹ்ஸான் என்ற படித்தரம் இருக்கின்றது. எவ்வளவு பெறுகின்றீர்களோ அதையும் கொடுங்கள். அதற்கும் மேற்பட்டு கொடுங்கள். பிறகு, இதற்கும் மேற்பட்டு ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்ற படித்தரம் இருக்கின்றது. ஒரு தாய் எந்த ஒரு கைமாறைப் பற்றிய எண்ணமும் இல்லமல் இயல்பாக தன் குழந்தையை நேசிப்பது போன்று மற்றவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

இறையடியார்கள் முன்னேற்றம் அடைந்து இப்படிப்பட்ட அன்பைப் பெற முடியும் என்பது திருக்குர்ஆனிலிருந்து நமக்கு தெரிய வருகின்றது. நீங்கள் விரும்பினால், முன்னேற்றமடைந்து அல்லாஹ்வுடனும், இப்படிப்பட்ட அன்பு கிடைத்துவிடும். மனிதனின் அறிவுத் திறன் சிறியதல்ல. இறையருளால், இந்த விஷயங்கள் கிடைத்து விடுகின்றன. இன்னும்கூறுவதாயின், இவை பரந்த நல்லொழுக்கங்களுக்கு அவசியமானவையாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறையடியார்கள் தாயின் அன்பிற்கான அனுமான அளவையும் விட அதிகமாக மனிதர்களை நேசிக்கின்றார்கள் என்பதை நான் நம்புகின்றேன். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 375, 1984 ஆம் ஆண்டு பதிப்பு) அடியார்களுக்கான உரிமையை செலுத்துவதற்காக தாய்மார்களையும் விட அதிகமாக மனிதர்களுடன் அன்பு செலுத்தப்படுகிறது.

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அதிகமாக கட்டளையிடக்கூடிய ஆன்மாவின் சூழலில் இருக்கும் இறையச்சம் உடையவரின் நிலைதான் நீதியின் நிலையாகும். இந்த நிலையை சீர்திருத்துவதற்காக நீதியை கடைபிடிப்பதற்கான கட்டளை உள்ளது. தீமைகளிலிருந்து வெளியே வருவது மற்றும் தவறான சிந்தனைகளிலிருந்து வெளியே வருவது ஆகிய இதுவும் நீதியின் நிலையாகும். அதில் மனதை எதிர்க்க வேண்டியது வருகின்றது.

பாவங்களிலிருந்து தப்பிப்பதற்காக மனதை எதிர்ப்பதும் நீதியின் ஒரு வகையாகும். உதாரணமாக, ஒருவரின் கடனை செலுத்த வேண்டியது இருக்கின்றது. ஆனால், எப்படியாவது அதை நான் அமுக்கி விடவேண்டும் என்று மனம் விரும்புகின்றது என்றால், தற்செயலாக அதற்கான கால அளவும் கடந்துவிடுகின்றது என்றால், இந்த சூழ்நிலையில் ஆன்மா இன்னும் அதிகம் துணிந்துவிடுகின்றது. இப்பொழுது சட்ட ரீதியாகவும் எந்த ஒரு பிடியும் இருக்க முடியாது என்று அச்சமற்றதாகிவிடும். ஆனால், இது சரியல்ல. ஒருவர் கட்டாயமாக செலுத்த வேண்டிய கடனை செலுத்துவதுதான் நீதியின் எதிர்பார்ப்பாகும். கடனை, கட்டாயக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். எந்த ஒரு சாக்குப் போக்கோ, காரணமோ கூறி அதை அமுக்கக் கூடாது.

சிலர் கடனை அமுக்குதல், குறித்த நேரத்தில் செலுத்தாமல் இருத்தல் போன்ற காரியங்களை செய்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், முற்றிலும் எந்த நிலைக்கு சென்றுவிடுகின்றார்கள் என்றால், தெளிவான சான்று ஏதும் இல்லையென்றால், முழுமையாக மறுத்து விடுகின்றார்கள். எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அவர்களின் ஒவ்வோர் அமலையும் பார்க்கின்றான் என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

இரண்டாவது, இந்த இடத்தில் கூடுதலாக இதையும் கூறிவிடுகின்றேன். சிலவேளை கொடுக்கல் வாங்கலின் சண்டைகள் எதனால் ஆரம்பிக்கின்றன என்றால், மக்கள் பிறர் மீது தேவையில்லாத நம்பிக்கை கொள்கின்றனர்; நம்புகின்றனர். ஆனால், எப்போது கொடுக்கல் வாங்கல் விவகாரம் வந்தாலும், நீங்கள் அதை எழுதிக் கொள்ளுங்கள்; எழுத்து வடிவில் கொண்டு வாருங்கள் என்று அல்லாஹ் கட்டளை இட்டுள்ளான். இவர் எனக்கு நெருங்கிய உறவினர் ஆவார். நெருங்கிய நண்பர் ஆவார். எனவே நான் எழுதவில்லை என்றிருக்கக் கூடாது. இதன் மூலமாகவே சண்டைகள் ஆரம்பிக்கின்றன. இதன் மூலமாகவே பிறகு தீமையைத் தூண்டக்கூடிய ஆன்மா மனிதனைத் தவறான செயல்களில் தூண்டுவதற்கு முயற்சி செய்கின்றது.

எவ்வாறு இருப்பினும், அவற்றிலிருந்து தப்பித்து, நீதியோடு செயல்படுவது ஒரு நம்பிக்கை கொண்டவரின் பணியாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் வருத்தத்துடன் கூற வேண்டி வருகின்றது! சில மக்கள் இந்த விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை. நமது ஜமாஅத்திலும், தமது கடன்களை செலுத்துவதில் மிகக் குறைவாகவே கவனம் செலுத்தும் இத்தகைய மக்கள் இருக்கின்றனர். இது நீதிக்கு எதிரான விஷயமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இப்படிப்பட்ட மக்களின் (ஜனாஸா) தொழுகையைத் தொழ வைத்ததில்லை.

எனவே, உங்களில் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை நன்றாக நினைவிற் கொள்ளட்டும்! கடன்களை செலுத்துவதில் சோம்பல் காட்டக் கூடாது.

எந்த ஒரு வகையான துரோகம் மற்றும் நம்பிக்கை இன்மையை விட்டும் விலகி ஓட வேண்டும். ஏனெனில், அது

அவன் இந்த வசனத்தில் பிறப்பித்துள்ள இறை கட்டளைக்கு எதிரானதாகும்.

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இதற்குப் பிறகு, அதிக நன்மைக்கான படித்தரம் உள்ளது. எவர் நீதியைக் கடைபிடிக்கின்றாரோ அதற்கான எல்லைகளை முறிப்பதில்லையோ அல்லாஹ் அவருக்கு நல்வாய்ப்பும் ஆற்றலும் வழங்கிவிடுகின்றான். அவர் நன்மையில் இன்னும் அதிகம் முன்னேறுகின்றார். எதுவரையெனில், நீதியை மட்டும் கடைபிடிப்பதில்லை. அதற்கும் மேற்பட்டு, சிறிதளவு நன்மைக்குப் பதிலாக மிகப் பெரிய நன்மை செய்கின்றார்.

ஆனால், அதிக நன்மை புரியும் நிலையிலும் ஒரு பலவீனம் இன்னும் எஞ்சியிருக்கின்றது. அது என்னவெனில், ஏதாவது ஒரு தருணத்தில் அந்த நன்மையை சொல்லிக் காட்டியும் விடுகின்றார். உதாரணமாக, ஒரு நபர் பத்து ஆண்டுகள் வரை ஒருவருக்கு உணவளிக்கின்றார். அவர் எப்பொழுதாவது அவருடைய ஏதாவது ஒரு பேச்சைக் கேட்கவில்லை என்றால், அவரிடம் 10 வருடங்களாக நீ எங்கள் உணவு கவளத்துக்கு அடிமையாக இருக்கின்றாய் என்று கூறிவிடுகின்றார். இவ்வாறு அந்த நன்மையைத் தாக்கமற்றதாக ஆக்கி விடுகின்றார்.

உண்மையில், அதிக நன்மை புரியக்கூடியவருக்குள்ளும் ஒருவிதமான மறைவான வெளிக்காட்டுதல் இருக்கின்றது. எவர் அதிக நன்மை புரிகின்றாரோ அவரிடம் வெளிக்காட்டுதல் மறைந்துள்ளது.

ஆனால், மூன்றாவது படித்தரம் எல்லாவிதமான மாசுகள் மற்றும் அசுத்தங்களை விட்டும் தூய்மையானதாகும். அது ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்ற படித்தரமாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஈதாயிதில் குர்பா என்பதற்கான படித்தரம் இயல்பான நிலையின் படித்தரமாகும். அதாவது, அந்தத் தரத்தில் மனிதனிடமிருந்து நன்மைகள் இயல்பான எதிர்பார்ப்பு இருப்பது போன்று வெளிப்பட வேண்டும். இதற்கான உதாரணம், ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டுவதைப் போன்றதும் அதை வளர்ப்பதைப் போன்றதும் ஆகும். இவன் பெரியவனாகி சம்பாதிப்பான்; தனக்குத் தொண்டு செய்வான் என்ற சிந்தனை கூட ஒருபோதும் அவளுக்கு வருவதில்லை.

எதுவரை என்றால், ஓர் அரசன் நீ உன் குழந்தைக்குப் பாலூட்டாமல் அதனால் அது மரணித்துவிட்டாலும் கூட நீ தண்டிக்கப்பட மாட்டாய் என்று கட்டளை இட்டாலும் சரி! அந்தக் கட்டளையின் பேரிலும் குழந்தைக்குப் பாலூட்டுவதை அவளால் விட முடியாது. இன்னும் சொல்வதாயின் அப்படிப்பட்ட அரசனை இரண்டு, மூன்று முறையாவது தீயச் சொற்களில் ஏசுவாள். ஏனெனில், அந்த வளர்த்தல் அவளுடைய ஓர் இயல்பான எதிர்பார்பாகும்.

அது எந்த ஒரு நம்பிக்கையையோ அல்லது அச்சத்தையோ அடிப்படையாகக் கொண்டதில்லை. இதேபோன்று மனிதன் நன்மையில் முன்னேறி, முன்னேறி எத்தகைய தரத்தை அடைந்து விடுகின்றான் என்றால் அந்த நன்மைகள் ஓர் இயல்பான எதிர்பார்ப்பாக அவனிடமிருந்து வெளிப்படுகின்றன. ஆக, இந்த நிலை தான் நிம்மதியடைந்த ஆன்மாவின் நிலை எனப்படுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 312- 314, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பின்னர், அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

தாய் சுயம் தன் மீது துன்பத்தை தாங்கிக் கொள்கின்றாள். ஆனால், குழந்தைக்கு நிம்மதியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்கின்றாள். தான் ஈரமான இடத்தில் படுத்துக் கொள்கின்றாள். ஆனால், அதற்குப் படுக்கையில் காய்ந்த பகுதியில் இடமளிக்கின்றாள். குழந்தை நோய்வாய்பட்டால் பல இரவுகள் கண் விழிக்கின்றாள். பல வகையான கஷ்டங்களை சகித்துக் கொள்கின்றாள்.

இப்பொழுது கூறுங்கள்! தாய் தன் குழந்தைக்காக செய்வதில் செயற்கைத்தனத்திற்கான அல்லது பாசாங்கிற்கான ஐயம் ஏதும் இருக்கின்றதா? இதுவோ தூய அன்பின் காரணமாக செய்யப்படுகின்றது. இறைவனுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான உரிமைகளை செலுத்துவதற்கு இந்த அன்பே ஒரு நம்பிக்கை கொண்டவரிடம் இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஆக, அல்லாஹ் கூறுகின்றான்: அதிக நன்மை என்ற படித்தரத்தை காட்டிலும் முன்னேறுங்கள். ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்ற படித்தரம் வரை முன்னேறுங்கள். எந்த ஒரு வெகுமதியோ அல்லது பலனோ அல்லது தொண்டுக்கான சிந்தனையோ இல்லாமல் இயற்கையான, இயல்பான உத்வேகத்தோடு இறை படைப்பினங்களுக்கு நன்மை செய்யுங்கள். எவ்விதமான பாசாங்கோ அல்லது செயற்கைத்தனமோ ஒருபோதும் இல்லாத அளவுக்கு நீங்கள் படைப்பினங்களுக்கு நன்மை செய்யுங்கள். அல்லாஹ் இன்னொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّلَا شُكُوْرًا

அதாவது, இறைவனை அடைதல் மற்றும் உயர் முன்னேற்றங்களை எட்டுதல் ஆகியவற்றிற்கு மனிதன் மேற்கொள்ள வேண்டிய விதியாவது, அவனுடைய நன்மை அல்லாஹ்விற்காக மட்டுமே இருக்க வேண்டும். அவனுடைய உள்ளத்தில் தனக்காக துஆ செய்யப்பட வேண்டும் அல்லது தனக்கு நன்றி செலுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் கூட இருக்கக் கூடாது. படைப்பினங்கள் மீது அனுதாபம் காட்டுவதற்காக அவனுடைய உள்ளத்தில் வைக்கப்பட்டுள்ள அந்த உத்வேகத்தின் எதிர்பார்ப்பால் மட்டுமே நன்மை செய்கின்றான். இப்படிப்பட்ட தூய போதனையை நாம் தவ்ராத்திலும் கண்டதில்லை. இன்ஜீலிலும் கண்டதில்லை. ஒவ்வொரு பக்கத்தையும் நாம் படித்துள்ளோம். ஆனால், இதுபோன்ற தூய்மையான, முழுமையான போதனையின் பெயர் அடையாளம் கூட இல்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 416- 417, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ் இவ்வாறு கட்டளையிடுகின்றான்: நன்மைக்குப் பகரமாக நன்மை புரியுங்கள். நீதியை விட அதிகமாக, அதிக நன்மைக்கான இடமும் சந்தர்ப்பமும் இருக்கின்றது என்றால், அங்கு அதிக நன்மை புரியுங்கள். அதிக நன்மையை விட அதிகமாக நெருங்கிய உறவினர்களைப் போன்று இயல்பான உத்வேகத்தோடு நன்மை செய்வதற்கான சந்தர்ப்பம் என்றால், அங்கு இயல்பான அனுதாபத்துடன் நன்மை புரியுங்கள். இதன் மூலமாக அல்லாஹ் கூறுகின்றான்:

நீங்கள் நடுநிலையின் எல்லையைக் கடந்து விடுவதை இறைவன் தடுக்கின்றான். எந்நிலையிலும் நடுநிலையைப் பேண வேண்டும். அல்லது அதிக நன்மை தொடர்பாக எதிரான நிலை உங்களிடமிருந்து வெளிப்பட்டால் எதை அறிவு நிராகரித்து விடுகிறதோ அந்த நிலை, அதாவது நீங்கள் பொருத்தமற்ற இடத்தில் அதிக நன்மை புரிவது அல்லது சரியான இடத்தில் அதிக நன்மை புரியாமல் இருப்பது ஆகியவை கூடாது. அறிவு, அறிவின் எதிர்பார்ப்பு மற்றும் நீதியின் எதிர்பார்ப்பையும் முன்னிறுத்த வேண்டும். அதாவது, பொருத்தமற்ற இடத்திலும் அதிக நன்மை கூடாது. எங்கு அதிக நன்மை புரிய வேண்டிய தேவை இருக்கின்றதோ அங்கு அதிக நன்மை புரிய மறுப்பது இதுவும் இருக்கக் கூடாது.

எவ்வாறு இருப்பினும், அறிவு என்ன எதிர்பார்க்கின்றது? எதில் பலன் இருக்கின்றது? என்பதைக் கண்டிப்பாக பார்க்க வேண்டும் அல்லது நீங்கள் பொருத்தமான இடத்தில் ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்கு கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்ற பண்பில் எந்தக் குறையும் வைக்கக் கூடாது. அளவுக்கு அதிகமாக கருணை மழை பொழிய வேண்டும்.

இந்த கண்ணியத்திற்குரிய வசனத்தில் நன்மையைப் பெறுவதற்கான மூன்று படித்தரங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனவே எங்கு இந்த நன்மைகள் செய்வதற்கான கட்டளை இருக்கின்றதோ அங்கு அறிவு, நடுநிலை மற்றும் நல்ல நோக்கங்களைப் பெறுவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், உங்களுடைய இந்த எல்லா நன்மைகளும் பலனை எட்ட வைப்பதற்காக இருக்க வேண்டுமே அன்றி, சமூகத்தில் சீர்கேட்டை ஏற்படுத்துவதற்காக இருக்கக் கூடாது என்பது கட்டாயமாகும். தாய், குழந்தையை அதிகமாக நேசித்தாலும் ஒருபோதும் அது கேட்கும் பொழுது அதன் கையில் நெருப்பு கங்கை வைக்க மாட்டாள். எனவே, நன்மை மற்றும் நன்மையை நாடுவதே அசல் நோக்கம் ஆகும். அதற்காக இந்த மூன்று நன்மைகளையும் செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: முதல் படித்தரம் நன்மைக்குப் பகரமாக நன்மை செய்வதாகும். இதுவோ குறைந்த படித்தரம் ஆகும். தனக்கு நன்மை செய்த ஒருவருக்கு நன்மை செய்து கொண்டிருப்பது எனும் இந்த நல்லொழுக்கத்தை அடிமட்டத்தில் இருக்கும் சாதாரண மனிதனாலும் பெற முடியும். எந்த

ஒழுக்கமான மனிதரும் இந்த நன்மையை செய்கின்றார். இது அடிப்படையான விஷயம் ஆகும். இது ஒன்றும் உயர்ந்த நன்மையல்ல. இதுவோ ஒழுக்கமாகும்.

இரண்டாம் படித்தரம், இதை விட கடினமானதாகும். அது தாமாக முன் வந்து பிறருக்கு நன்மை செய்வது மற்றும் எவருக்கும் செலுத்த வேண்டிய உரிமையாக அல்லாமல், அதிக நன்மை பயக்கும் விதமாக ஒருவருக்கு பலன் அளிப்பது. இந்தப் படித்தரம் நடுத்தரமானதாகும். நன்மை செய்வது எவருக்குமான உரிமையாக அல்லாமல், ஒருவருக்கு நன்மை செய்வது பலன் சேர்ப்பது, இந்த நற்பண்பும் நடுத்தரமானதாகும். இடைப்பட்ட படித்தரமாகும்.

ஏராளமான மக்கள் ஏழைகளுக்கு அதிக நன்மை செய்கின்றார்கள். அதிக நன்மை செய்வதில் மறைமுகமான இந்த ஒரு குறைபாடு உள்ளது. அதாவது, அதிக நன்மை புரிந்தவர் நினைக்கின்றார். நான் அதிக நன்மை செய்துள்ளேன். குறைந்தபட்சம் அவர் தான் செய்த நன்மைக்குப் பகரமாக நன்றியை அல்லது துஆவை எதிர்பார்க்கின்றார்.

இவ்வாறு நன்மை செய்யப்பட்ட ஒருவர் அவருக்கு எதிராக மாறிவிட்டால் அவரை நன்றி மறந்தவர் எனக் கூறுகின்றார். எவருக்கு அதிக நன்மை செய்திருக்கின்றாரோ அவர் ஏதாவது காரணத்தினால் எதிராக ஆகிவிட்டால், பிறகு அவரை நன்றி மறந்தவர் எனக் கூறுகின்றார். சிலவேளையில், நான் உனக்கு நன்மை செய்தேன்; இவ்வளவு காலம் உனக்கு உதவினேன் அல்லது என்னிடமிருந்து நீ பலன் பெறுகிறாய் என்று தான் செய்த நன்மையின் காரணமாக அவர் மீது அவரது சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்திவிடுகின்றார். ஆக, நன்மை செய்த மனிதர் அவரது ஆற்றலை விட அதிகமான சுமையை அவர் மீது சுமத்தி விடுகின்றார்.

மேலும், தான் செய்த நன்மையை அவருக்கு நினைவூட்டுகின்றார். அதிக நன்மை புரிபவர்களை எச்சரிப்பதற்காக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

لَا تُبۡطِلُوۡا صَدَقٰتِكُمۡ بِالۡمَنِّ وَالۡاَذٰى

அதாவது, நன்மை செய்பவர்களே! நீங்கள் உண்மையின் அடிப்படையில் செய்ய வேண்டிய தான தருமங்களை உங்களின் பேருதவிகளை நினைவுபடுத்தியும், துன்பமிழைத்தும் வீணடித்து விடாதீர்கள். (2:265)

இப்படிப்பட்ட பேருதவிகள் உங்களுக்கு எந்தப் பலனும் அளிக்காது என்று இத்தகைய மக்களுக்கு அல்லாஹ் எச்சரிக்கை விடுத்துள்ளான். நீங்கள் தான தருமங்களை செய்கின்றீர்கள் என்றால், உண்மையின் அடிப்படையில் செய்ய வேண்டும். செய்த நன்மையை நினைவுபடுத்த வேண்டும் என்றால், பிறகு உங்களின் நன்மைகள் அனைத்தும் வீணாகி விடும். அதாவது, ஸதகா (தான தருமங்கள்) என்ற சொல் ஸித்க் (உண்மை) என்ற சொல்லில் இருந்து வெளிப்பட்டதாகும். எனவே, உள்ளத்தில் உண்மையும், தூய்மையும் இல்லையென்றால், அந்த ஸதகா, ஸதகாவாக இருப்பதில்லை. மாறாக, அது வெளிக்காட்டும் செயலாக ஆகிவிடுகின்றது.

சுருக்கமாக, அதிக நன்மை செய்பவர்களிடம் இந்த ஒரு குறைபாடு இருக்கின்றது. சிலநேரத்தில் கோபத்திற்குள்ளாகி தனது நன்மையையும் நினைவூட்டி விடுகின்றனர். இதன் காரணமாகவே இறைவன் அதிக நன்மை செய்கின்றவர்களை எச்சரித்துள்ளான்.

நன்மையைப் பெறுவதற்குரிய மூன்றாம் நிலையாக இறைவன் இதைக் கூறியிருக்கின்றான். அதாவது, அதிக நன்மை செய்கிறோம் என்ற எண்ணம் அறவே இருக்கக் கூடாது. நன்றி தெரிவிப்பவர்கள் என்பதன் மீது பார்வை இருக்கக் கூடாது. மாறாக, மிகவும் நெருங்கிய உறவு போன்று, உதாரணமாக, ஒரு தாய் அனுதாப உணர்வின் காரணமாக மட்டுமே தனது பிள்ளைக்கு நன்மை புரிவது போன்று, அனுதாப உணர்வுடன் நன்மை செய்ய வேண்டும். இந்த நிலைதான் நன்மையைப் பெறுவதற்குரிய இறுதிப் படித்தரமாகும். இதை விட முன்னேறுவது சாத்தியமே இல்லை. ஆனால், இறைவன் நன்மையைப் பெறுவதற்குரிய இந்த எல்லா வகைகளையும் தகுந்த இடம் மற்றும் சந்தர்ப்பத்தோடு இணைத்துள்ளான். பிறகு, இவை தீமைகளாகி விடும் என்று மேற்குறிப்பிட்ட வசனத்தில் இறைவன் தெளிவாகக் கூறிவிட்டான்.

இதுவும் எச்சரிக்கையாகும். நன்மைகள் அவற்றிற்கான இடத்தில் செய்யப்படவில்லை என்றால் சரியாக செய்யப்படவில்லை என்றால் உலகில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன என்றால், பின்னர் அவை நன்மைகளாக இருக்காது. தீமைகள் ஆகிவிடும். நீதிக்குப் பகரமாக வெட்கக் கேடாக ஆகிவிடும். அடுத்தப் பகுதியைப் பற்றி சிறிதளவு குறிப்பும் வந்துவிடுகின்றது. அதில் தீமைகளில் இருந்து தவிர்ந்திருப்பதற்கான குறிப்பு உள்ளது. வரம்பு மீறி செயல்பட்டால் அது அசுத்தமான நிலையாக ஆகிவிடும். இவ்வாறே, அதிக நன்மைக்குப் பதிலாக நிராகரிப்பு நிலை உருவாகிவிடும்.

இது அதிக நன்மையாக இருக்காது. இவ்வாறு பிறகு, மனிதன் நிராகரிப்பவன் ஆகிவிடுவான். அதாவது, எந்த நிலையை அறிவும், நிலையான உள்ளமும் நிராகரிக்கிறதோ அது ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்பதற்கு பதிலாக வரம்பு மீறிவிடுகிறது. அதாவது பொருத்தமற்ற இடத்தில் வெளிப்படும் அந்த அனுதாப உணர்வு ஒரு தீய சூழலை உருவாக்கி விடும். உண்மையில் பகீ என்ற அரபிச் சொல் அளவுக்கு அதிகமாக பொழிந்து வயல்களை நாசமாக்கும் மழைக்குக் கூறப்படும்.

கடமையை செலுத்துவதில் குறை வைப்பதற்கும் பகீ என்று கூறப்படும் அல்லது கடமையானதைத் தாண்டிச் செல்வதும் பகீ எனப்படும். செலுத்த வேண்டிய கடமையில் குறைவு ஏற்பட்டு விட்டால் அதையும் பகீ என்பார்கள். கடமையானதை விட அதிகம் செய்தால் அங்கு பக்ய என்ற சொல் பயன்படும். சுருக்கமாக, இந்த மூன்று நிலைகளிலும் எவை பொருத்தமற்ற தருணத்தில் வெளிப்பட்டதோ அதுவே தீய ஒழுக்கமாக ஆகிவிடும்.

எனவேதான், இந்த மூன்று படித்தரங்களுடன் தகுந்த இடம் மற்றும் தருணம் நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது. நீதி, அதிக நன்மை செய்தல் மற்றும் உறவினர்கள் மீது காட்டப்படுவது போன்ற அனுதாபம் காட்டுதல் ஆகிய இவற்றை மட்டும் நல்லொழுக்கம் என்று கூற முடியாது என்பதனை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

மாறாக, இவையனைத்தும் மனிதனின் இயல்பான நிலைகளும், இயல்பான ஆற்றல்களுமாகும். அறிவு முதிர்ச்சி பெறாத குழந்தைகளிடம் இவை காணப்படுகின்றன. ஆனால், (இந்தப் பண்புகள்) நல்லொழுக்கமாக அமைய அறிவு இருப்பது நிபந்தனையாகும். ஒவ்வோர் இயல்பான ஆற்றலும் தகுந்த இடம் மற்றும் தருணத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளது.

அடுத்து நன்மை தொடர்பாக மேலும் பல முக்கிய வழிகாட்டல்கள் திருக்குர்ஆனில் உள்ளன. அவை தகுந்த இடம் மற்றும் தருணத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவதற்காக (அரபு மொழியில்) குறிப்பிட்டுக் கூறுவதற்காக வரும் அலிஃப், லாம் என்பதுடன் (சேர்ந்து) பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, இந்த நற்பண்புகள் அனைத்தும், இந்த விஷயங்களுக்கு இன்ன நற்பண்புகள் ஆகும் என்று சிறப்பாக குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. (இஸ்லாமி உசூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயீன், தொகுதி 10, பக்கம் 353-355)

எனவே பல்வேறு வடிவில், பல்வேறு உதாரணங்களால் அன்னார் (அலை) அந்த நன்மைகளை செய்யுமாறு நமக்கு வலியுறுத்தியுள்ளார்கள். இது சம்பந்தமாக, நன்மை செய்தல் தொடர்பாக அதிக நன்மை செய்தல் தொடர்பாக தமது சம்பவம் ஒன்றையும் எடுத்துரைக்கின்றார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இஹ்ஸான் - அதிக நன்மை செய்தல் மிகவும் உன்னதமான விஷயம் ஆகும். இதனால் மனிதன் தன்னுடைய பெரும் பெரும் எதிரிகளைத தனக்குக் கீழாக்கி விடுகின்றான். ஆக, சியால்கோட்டில் ஒரு நபர் இருந்தார். அவர் எல்லாருடனும் சண்டையிட்டு வந்தார். அவர் சமரசம் செய்து கொண்ட எந்த நபரும் இருக்கவில்லை. எதுவரை என்றால், அவருடைய சகோதரர் மற்றும் உற்றார் உறவினர் அவரால் நொந்து போயிருந்தார்கள். அவருடன் நான் சிலவேளை சாதாரணமாக நல்லமுறையில் நடந்து கொண்டேன். அவர் அதற்கு பகரமாக ஒருபோதும் என்னுடன் தவறாக நடப்பதில்லை. இன்னும் சொல்வதாயின், சந்திக்கும்போதெல்லாம் மிகவும் பணிவுடன் உரையாடுவார்.

இவ்வாறே, ஓர் அரேபியர் நம் இடத்திற்கு வந்தார். அவர் வஹாபிகளின் கடுமையான எதிரியாக இருந்தார். எந்த அளவுக்கு என்றால், அவர் முன் வஹாபிகளைப் பற்றி பேசப்பட்டால் ஏச்சுப் பேச்சுகளில் ஈடுபட்டு விடுவார். அவர் இங்கு வந்தும் கடுமையாக ஏச ஆரம்பித்தார். வஹாபிகளைத் தூற்ற ஆரம்பித்தார். நாம் அவரை சிறிதும் பொருட்படுத்தாமல் அவருக்கு நன்றாகத்

தொண்டாற்றினோம். நன்றாக அவருக்கு விருந்து உபசரித்தோம்.

ஒருநாள் அவர் கோபத்தில் கொந்தளித்தவாறு வஹாபிகளை சராமாரியாக ஏசிக் கொண்டிருந்தபோது ஒருவர் அவரிடம், நீ எவருடைய வீட்டில் விருந்தாளியாக இருக்கின்றாயோ அவரும் வஹாபிதான் என்று கூறினார். அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி கூறினார். இதனால் அவர் அமைதியாகிவிட்டார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த மனிதர் என்னை வஹாபி என்று கூறினாரோ அவர் என்னை வஹாபி என்று கூறியது தவறில்லை. ஏனென்றால், திருக்குர்ஆனுக்குப் பிறகு சரியான ஹதீஸ்களின் படி செயல்படுவதையே நான் அவசியமாகக் கருதுகின்றேன். எவ்வாறு இருப்பினும், சிலநாள்களுக்குப் பிறகு, அந்த மனிதர் சென்றுவிட்டார். அதற்குப் பிறகு, ஒருமுறை லாஹூரில் சந்தித்தோம். வஹாபிகளின் முகத்தைப் பார்க்கக் கூட அவர் தயாராக இல்லைதான். ஆனால், அவருக்கு நல்ல உபசரிப்பு செய்திருந்ததால் அவருடைய உணர்ச்சி, ஆவேசம் அனைத்தும் தணிந்துவிட்டது. அவர் மிகவும் பரிவுடனும், அன்புடனும் என்னை சந்தித்தார்.

ஆக, மிகவும் வற்புறுத்தி என்னை உடன் அழைத்துச் சென்றார். அவர் இமாமாக நியமிக்கப்பட்டிருந்த சிறிய பள்ளிவாசலில் என்னை அமர வைத்துவிட்டார். பணியாளர்களைப் போன்று அவரே எனக்கு விசிற ஆரம்பித்தார். கொஞ்சம் தேநீர் ஏதும் அருந்திவிட்டு செல்லுங்கள் என்று மிகவும் உபசரித்தார். ஆக, அதிக நன்மை எந்த அளவுக்கு உள்ளங்களை வசீகரம் செய்துவிடுகிறது என்று பாருங்கள்! (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 302, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒழுக்கங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, இன்றைய காலத்து நவீன கல்வி பயின்றவர்கள் செய்கின்றார்கள். அதாவது சந்திப்புகளின் போது பசப்புரை மற்றும் மனதில் இருப்பதை வெளிப்படுத்தாமல் நடந்து கொள்கின்றார்கள். பசப்புகிறார்கள். ஆமாம் போடுகிறார்கள். உள்ளத்தில் நயவஞ்சகமும், காழ்ப்புணர்ச்சியும் நிறைந்து இருக்கும். இந்தப் பண்புகள் திருக்குர்ஆனுக்கு எதிரானவையாகும்.

ஒழுக்கத்தின் இரண்டாவது வகை உண்மையான அனுதாபம் காட்ட வேண்டும் என்பதாகும். உள்ளத்தில் நயவஞ்சகம் இருக்கக் கூடாது. பசப்புதல், மனதில் இருப்பதை வெளிப்படுத்தாமல் இருத்தல் ஆகியவை இருக்கக் கூடாது. இது குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَآئِ ذِى الْقُرْبٰى

ஆக, இவை முழுமையான வழிமுறைகளாகும். ஒவ்வொரு முழுமையான வழிமுறையும் நேர்வழியும் இறைவனின் நூலில் இருக்கின்றது. எவர்கள் இதிலிருந்து முகந்திருப்புகின்றார்களோ அவர்களால் வேறு இடத்திலிருந்து நேர்வழி பெற இயலாது. நல்ல போதனை தனது தாக்கத்தை வெளிப்படுத்த தூய உள்ளத்தை நாடுகிறது. எந்த மக்கள் இதிலிருந்து விலகி இருக்கின்றார்களோ அவர்களைச் சற்று ஆழமான பார்வையால் பார்த்தீர்கள் என்றால், அவர்களிடம் நிச்சயமாக அசுத்தம் தென்படும்.

வாழ்க்கைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. தொழுகை, உண்மைத்துவம் மற்றும் தூய்மை ஆகியவற்றில் முன்னேறுங்கள். அன்னார் (அலை) நமக்கு அறிவுரை கூறுகின்றார்கள்:

தொழுகை உண்மைத்துவம், மற்றும் தூய்மை ஆகியவற்றில் முன்னேறுங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 200, 1984 ஆம் ஆண்டு பதிப்பு) இறை வணக்கங்களில் உண்மைத்துவத்தில், தூய்மையில் முன்னேறுங்கள்.

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீங்கள் உங்களின் அனுதாபத்தின் எல்லையை ஒருபோதும் சுருக்கிக் கொள்ளாதீர்கள். அனுதாபத்திற்காக அல்லாஹ் வழங்கிய அந்தப் போதனையைப் பின்பற்றுங்கள் என்றே நான் உங்களுக்கு மீண்டும், மீண்டும் அறிவுறுத்துகின்றேன்.

إِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَآئِ ذِى الْقُرْبٰى

அதாவது முதலாவதாக, நீங்கள் நன்மை செய்வதில் நீதியைக் கருத்தில் கொள்வது. எவர் உங்களுக்கு நன்மை செய்கிறாரோ அவருக்கு நீங்களும் நன்மை செய்யுங்கள். பிறகு, இரண்டாவது படித்தரமாவது நீங்கள் அதைவிடக் கூடுதலாக அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். இது இஹ்ஸான் - அதிக நன்மை புரிதல் ஆகும். அதிக நன்மை புரியும் தரம் நீதியை விட மேலானது தான். இது பெரிய நன்மையாகும். ஆனால், சில சமயங்களில் அதிக நன்மை செய்பவர் தான் செய்த நன்மையைப் சொல்லிக் காட்டுவதற்கான சாத்தியம் உள்ளது.

ஆனால், இவை அனைத்தையும் விட மேலான ஒரு தரம் உள்ளது. மனிதன் சொந்த அன்பு என்ற வகையில் இருக்கும் நன்மையை செய்ய வேண்டும். அதில் நன்மையை வெளிப்படுத்துவதற்கான எந்தப் பங்கும் இருக்காது. ஒரு தாய் தன் குழந்தையை வளர்ப்பது போன்று இருக்க வேண்டும். அவள் இந்த வளர்ப்பிற்குப் பகரமாக எந்த வெகுமதியையும், நல்ல முறையில் நடந்து கொள்வதையும் எதிர்பார்ப்பதில்லை. மாறாக, ஓர் இயல்பான உத்வேகமாக அது இருக்கின்றது. அவள் தன் குழந்தைக்காக எல்லா சுகத்தையும், நிம்மதியையும் தியாகம் செய்துவிடுகின்றாள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீ குழந்தைக்குப் பால் கொடுக்கக் கூடாது என்று அரசரே கூறினாலும் அவள் அரசரைப் பழித்துரைப்பாள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனவே இயல்பான தரம் வரை அதை எட்ட வைக்கக் கூடிய அளவுக்கு நன்மை செய்ய வேண்டும். ஏனென்றால், ஒரு விஷயம் முன்னேற்றம் அடைந்து அடைந்து தனது இயல்பான மேன்மை வரை சென்றடைந்துவிடும் போது, அப்போது அது முழுமை பெறுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 382- 383, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: முழு உலகத்துடன் நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்று இறைவன் கட்டளை இடுகின்றான். அதாவது, எந்த அளவிற்கு உரிமை உள்ளதோ அந்த அளவிற்கே பெறுங்கள்.

மனித சமுதாயத்துடன் நியாயமாக நடந்து கொள்ளுங்கள். இதற்கும் மேற்பட்டு இந்தக் கட்டளை உள்ளது; நீங்கள் மனித சமுதாயத்திற்கு அதிக நன்மை செய்யுங்கள். எனினும், அதிக நன்மையில் ஒரு குறை மறைந்துள்ளது. அதாவது, நன்மை செய்பவர் சில சமயங்களில் கோபம் கொண்டு தான் செய்த நன்மையை நினைவூட்டியும் விடுகின்றார். ஆகையால்தான், இந்த வசனத்தின் இறுதியில் ஒரு தாய் தன் குழந்தைக்கு நன்மை பயப்பது போன்று மனித சமுதாயத்திற்கு நீங்கள் நன்மை செய்யுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் அந்த நன்மை வெறும் இயல்பான உத்வேகத்தால் செய்யப்படுகின்றது. எந்த வெகுமதியின் நோக்கத்தோடும் செய்யப்படுவதில்லை. இந்த நன்மைக்குப் பகரமாக, இந்தக் குழந்தை எனக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமே (அந்தத் தாயின்) உள்ளத்தில் இருப்பது இல்லை. எனவே மனித சமுதாயத்திற்கு செய்யப்படும் அந்த நன்மையின் முழுமையான தரம் இந்த மூன்றாவது தரமாகும். இதை ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் என்ற சொற்களில் கூறப்பட்டுள்ளது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 388)

எனவே, நன்மையைத் தம்மவர்களுக்கு மட்டும் அல்லாமல், அதற்கும் மேற்பட்டு எல்லாருடனும் நன்மை செய்யுமாறும் வெகுமதி இன்றி நன்மை செய்யுமாறும் கட்டளை இடப்பட்டுள்ளது. இந்தத் தரத்தில்தான் இறைவனும் கிடைக்கின்றான்.

அல்லாஹ்வுடனான தொடர்பு குறித்தும் இதைக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய நூல்களிலும் தம்முடைய சபைகளிலும் இது தொடர்பாக எண்ணற்ற முறை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இஸ்லாத்தின் சிறப்புகளில் மிகப் பெரிய ஒரு சிறப்பு மற்ற எந்த மார்க்கத்தின் போதனைகளிலும் இல்லாதது என்று இதைக் கூறியுள்ளார்கள். எனவே அல்லாஹ்வுடனான தொடர்பின் தரத்தைப் பெறுவதற்கும் அடியார்களுக்கான உரிமைகளை செலுத்துவதற்கும் இதன்படி செயல்பட முயற்சி செய்வது நமது பணியாகும்.

அல்லாஹ் நமக்கு இதற்கு ஏற்ப நம் வாழ்வைக் கழிப்பதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நாம் நம்முடைய இறைவணக்கங்களின் தரத்தையும் உயர்ந்த வகையில் பெறுபவர்களாக இருப்போமாக! குறிப்பாக, ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசத்திற்கான உறவையும் உலகத்திற்கே ஒரு முன்னுதாரணமாகத் திகழும் வண்ணம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக

இருப்போமாக!

அல்லாஹ் நமக்கு இவ்விஷயங்களின்படி செயல்படுவதற்கு நல்வாய்ப்பு வழங்கியவாறு பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றுவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. மனித சமுதாயத்துடன் அனுதாபத்தோடு நடந்து கொள்வோம் என்பது அன்னாரிடம் செய்யும் பைஅத்திலும் ஒரு நிபந்தனையாக உள்ளது.

ஒவ்வொரு ஜுமுஆவும், நாம் அல்லாஹ்வின் இந்த சொற்களைக் கேட்டு நன்மைகளில் முன்னேறுதல் மற்றும் நம்மை சீர்திருத்திக் கொள்ளுதல் ஆகியவற்றின் பக்கம் நமக்கு கவனமூட்டக் கூடியதாகவும் இருக்கட்டுமாக! அவ்வாறு இல்லை என்றால், நமக்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இருக்காது.

அல்லாஹ் நமக்கும் மற்றவர்களுக்கும் ஒரு தெளிவான வித்தியாசத்தைக் காட்டுவானாக! இது குறித்து ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் வேதனையுடன் கூறியுள்ளார்கள். பாகிஸ்தானின் நிலைமைக்காவும் துஆ செய்து கொண்டே இருங்கள். நாமோ நன்மைகளைப் பரப்புவதற்காக நமது பணியை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஷைத்தானிய இயல்பைக் கொண்ட மக்கள் அவர்களுடைய பணியை அநியாயத்தை செய்து கொண்டுதான் இருப்பார்கள். நாமோ இந்த ஷைத்தான்களுடன், ஷைத்தானிய நிலையில் போட்டியிட மாட்டோம். நாமோ அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.

அல்லாஹ் நமது ஈமானைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நமது ஈமான் ஒருபோதும் அசையக்கூடாது என்றும் எப்போதும் துஆ செய்யுங்கள். நமக்கு அல்லாஹ்வுடன் ஈதாயிதில் குர்பா - உறவினர்களுக்குக் கொடுப்பதைப் போன்று கொடுத்தல் எனும் தொடர்பு உருவாகட்டுமாக!

பிறகு நாம் அல்லாஹ்வின் அருட்களின் காட்சியையும் முன்பை விட அதிகமாக காண்போம். இன்ஷாஅல்லாஹ். **அல்லாஹ்வின் பார்வையில் எதிரிகளாகவும், அல்லாஹ்வின் பார்வையில் சீர்திருத்தத்திற்குத் தகுதி அற்றவர்களாகவும் இருப்பவர்களை அவன் தானே அழிப்பானாக! இந்த நிலை உருவாகும்போது, அல்லாஹ்வுடன் நமது தொடர்பு இருக்கும்போது, பிறகு எதிரிகளின் அழிவின் காட்சியையும் நாம் காண்போம். இன்ஷாஅல்லாஹ்!**

தமிழாக்கம் :
மவ்லவி அதாவுல் முஃக்னீ

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

**KHAIRUL-ISLAM**
**JAYGON-WEST BENGAL** 97348 44732

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர். இதுபோன்ற கூற்றுகளே மக்களை அழித்துவிட்டது. ஒருவர் ஓதி ஊதிவிடுவதால் ஒருவர் சான்றோராகி விடுகின்றார் என்று மக்கள் கருதுகின்றனர்.

எந்த மக்கள் இறைவனிடம் அவசரப்படுகின்றார்களோ அவர்கள் அழிந்து விடுகின்றார்கள். உலகில் ஒவ்வொரு பொருளின் முன்னேற்றமும் படிப்படியாகவே நிகழ்கின்றது. ஆன்மிக முன்னேற்றமும் அதைப் போன்றே நிகழ்கின்றது. மேலும், கடும் முயற்சிகள் இன்றி, ஒன்றுமே நிகழ முடியாது. அந்த கடும் முயற்சிகளும் கூட இறைவழியில் இருந்து செய்யப்படக் கூடியதாக இருக்க வேண்டுமே தவிர, திருக்குர்ஆனிற்கு எதிரான, யோகிகளைப் போன்று சுயமாகவே பயனற்ற தனிமையை மேற்கொள்கின்ற இறைவணக்கம் மற்றும் முஜாஹிதாக்களை உருவாக்கிக் கொள்ளக் கூடாது. இந்தப் பணிக்காகவே இறைவன் என்னை நபியாக ஆக்கி அனுப்பியுள்ளான். அதாவது, எவ்வாறு மனிதன் அல்லாஹ்வை சென்றடைய முடியும்? என்பதை உலகத்திற்கு காட்டுவதற்காகவே என்னை இறைவன் அனுப்பியுள்ளான். இது இயற்கைச் சட்டமாகும். அதாவது அனைவருமே இழப்பிற்குரியவர்களாக இருப்பதுமில்லை. அனைவருமே நேர்வழியை பெற்றுவிடுவதுமில்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 1,பக்கம் 460,
காதியான் பதிப்பு -2003)

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

விஷயத்திலிருந்து தடுத்து நிறுத்துவதுடன் அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகளையும் கூறிவிடுகின்ற வேதமே மனநிறைவை வழங்க முடியும். அப்போதுதான் என்னால் இந்த போதனையின் படி அமல் செய்ய முடியும் என்ற மனநிறைவு மனிதனுக்கு ஏற்பட முடியும். நீ எந்த அந்நியப் பெண்ணையும் தீய பார்வையுடன் பார்க்காதே! என்று இன்ஜீல் கூறுகின்றது. ஆனால், நீ எந்த அந்நியப் பெண்ணின் பக்கமும் பார்வையை உயர்த்தியே பார்க்காதே! என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. ஏனெனில், மனிதனின் உள்ளத்தில் தடுமாற்றத்தை உருவாக்குகின்ற அந்த ஈர்ப்பிற்கான வழி திறந்துவிடும்போது பின்னர் பாதுகாப்பு என்பது அசாத்தியமானது என்று இல்லையென்றாலும் கூட நிச்சயம் மிக கடினமானதாக ஆகிவிடுகின்றது. இந்த நுட்பமான ஞானத்தின் கீழ், நீங்கள் எங்கு நின்று கொண்டு தீமையை எதிர்க்க முடியுமோ அந்த அளவிற்கு பாவத்தின் இடத்திலிருந்து தொலைவில் விலகி நிற்க வேண்டும். இது கோழைத்தனம் என்று சிலர் கூறினர். ஆனால், இது கோழைத்தனம் அல்ல. இது முன்னெச்சரிக்கை ஆகும். மேலும், எந்த ஓர் அறிவுடையவரும் முன்னெச்சரிக்கையை கோழைத்தனம் என்று கூறமாட்டார்.

மனிதன் இரண்டே வகைப்படுவான் என்பது வெளிப்படையாகும். முதல் வகை, பாவத்திற்கு அருகிலேயே சென்ற பிறகும் (பாவத்திலிருந்து) தப்பிக்க முடிந்தவர். அதுபோன்ற நபர் பாவத்தின் இடத்திலிருந்து விலகி இருப்பதற்கு ஏன் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது என்றால், அவரால் தப்பித்துவிட முடியும் என்றாலும், அவரை பார்த்து விட்டு மற்ற மக்களும் அந்த இடம் வரை சென்றுவிடுவார்கள். மேலும். தங்களது பலவீனத்தின் காரணமாக பாவத்தில் மூழ்கிவிடுவார்கள். எனவே அதுபோன்ற நபர் மக்களின் தடுமாற்றத்திற்கு காரணமாக ஆகிவிடக் கூடாது.

இரண்டாவது வகையான மக்கள் யாரென்றால், பாவத்திற்கான சந்தர்ப்பம் உருவாகிவிடும் நிலையில் அதிலிருந்து தப்பிக்கவே முடியாதவர்கள் ஆவர். அவர்களை அதன் அருகில் கூட செல்ல அனுமதிக்காததன் நுட்பமான ஞானம் வெளிப்படையாகும். எனவே மனிதன் பாவத்திற்கு அருகில் சென்ற பிறகும் தப்பிக்க முடிந்தாலும் சரி அல்லது தப்பிக்க முடியாதவராக இருந்தாலும் சரி இரண்டு நிலைகளிலும் மனிதன் பாவத்திற்கு அருகில் கூட செல்லக் கூடாது.

இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, எந்த இடத்தின் பக்கம் செல்வதில் ஒரு குறிப்பான பயன் நோக்கமாக இருக்குமோ அதன் பக்கம் செல்லாமல் இருப்பதுதான் கோழைத்தனம் என்று கூறப்படும். ஆனால், எதன் பக்கம் செல்வதில் அல்லது செல்லாமல் இருப்பதில் எந்த குறிப்பான நன்மையும் இருக்காதோ அதிலிருந்து விலகி இருப்பது ஒருபோதும் கோழைத்தனம் என்றழைக்கப்பட முடியாது.

விபச்சாரத்தில் ஒழுக்க ரீதியிலான பாவங்கள் மட்டுமின்றி இன்னும் ஏராளமான பாதிப்புகள் உள்ளன என்பதன் பக்கம் سَآءَ سَبِيۡلًا என்ற இந்த சொற்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நல்ல உடல்நலம் கொண்ட மற்றும் தொற்று நோய் எதுவும் இல்லாத, நல்ல பழக்கவழக்கங்களும், ஒழுக்கங்களும் கொண்ட பெண்ணை எந்த மனிதன் திருமணம் செய்கின்றானோ அவன் நிச்சயமாக தற்காத்துக் கொள்கின்றான். இதேபோன்று பெண்ணின் உறவினர்கள் மணமகனைப் பற்றியும் சிந்தித்து புரிந்து கொள்கின்றனர். ஆனால், விபச்சாரத்தில் இந்த தற்காப்பு இருக்க முடியாது. ஏனெனில், பாலியல் உணர்வுகள் கிளர்ந்து எழுந்து விடுவதன் நிலையிலேயே தான் விபச்சாரம் நிகழ்கின்றது. மேலும், அந்நேரத்தில் மனிதன் எந்த வகையான தற்காப்பையும் செய்ய முடியாது. அதன் விளைவு பல வகையான நோய்கள் அல்லது பொருளாதார அழிவின் வடிவில் வெளிப்படுகின்றது. எனவே, பாலியல் உணர்வுகளின் தேட்டங்களை முழுமை செய்து கொள்வதற்கான இந்த வழி மிகவும் அபாயகரமானதாகும்.

இந்த விஷயம் தினமும் நடைமுறையில் வந்து கொண்டிருக்கின்றது. அதாவது, ஒருவகையில் மனைவியுடன் எந்த தொடர்பை கணவன் ஏற்படுத்துகின்றானோ அதே வகையான தொடர்பையே விபச்சாரன் மற்றும் விபச்சாரி கொள்கின்றனர். ஆனால், அதன் பின்னரும் விபச்சாரத்தின் விளைவாக எவ்வகையான நோய்கள் உருவாகின்றனவோ அவை மனைவியின் மூலம் உருவாகுவதில்லை அல்லது மிக அரிதாகவே உருவாகின்றது. உலகில் சிபிலிஸ் அல்லது கோனோரியா (எனும் பால்வினை) நோய்களால் எவர்கள் பாதிக்கப்படுகின்றனரோ அவர்களில் எத்தனை நபர்கள் (தங்களின்) மனைவிமார்களின் மூலம் அந்த நோயைப் பெறுகின்றனர்? நூற்றில் ஒருவராகவே இருப்பார். மீதமுள்ள 99 சதவிகிதம் பேர் அல்லது அதை விட அதிகமான பகுதியினர் விபச்சாரத்தின் மூலமாக இந்த நோய்களைப் பெறுகின்றனர். கணவர் அல்லது மனைவிக்கு ஒருவர் மற்றவரிடமிருந்து ஏற்படுகின்ற நோயும் கூட உண்மையில் முந்தைய ஒரு விபச்சாரத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது.

எனவே سَآءَ سَبِيۡلًا என்று கூறி ஒரு அருமையான உண்மையின் பக்கம் இறைவன் மனிதனுக்கு கவனமூட்டியுள்ளான். அது எல்லாருக்கும் முன்னால் உள்ளது. ஆனால், அதன் பக்கம் குறைவான மக்களுக்கே கவனம் இருக்கின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 328,
காதியான் பதிப்பு 2010)

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

*Weekly* **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 15 June 2023 Issue No. 24

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஜுமுஆ பேருரை

**மஜ்லிஸே ஷூராவின் முக்கியத்துவம் மற்றும் அதன் உறுப்பினர்களின் பொறுப்புகளைக் குறித்த ஆழிய ஞானம் நிறைந்த பேருரை**

**மஜ்லிஸே ஷூரா என்பது ஆலோசனை வழங்கக் கூடிய சபை ஆகும். அது தீர்ப்பு வழங்கக் கூடியது அல்ல.**

**ஆலோசனை கொடுக்கக் கூடியவர்கள் எப்போதும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் ஆலோசனைகள் நல்லெண்ணம் மற்றும் இறையச்சத்தின் உயர் தரத்திற்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்**

**உங்களது செயல் முன்மாதிரி, மக்களிடத்தில் நேசம் மிகு தொடர்பு, அவர்களைக் குறித்த வேதனையை உள்ளத்தில் கொள்வது, அவர்களுக்காகவும், தமக்காகவும் துஆ செய்வது, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவது போன்றவை ஒவ்வொரு பொறுப்பாளர் மற்றும் மஜ்லிஸே ஷூராவின் ஒவ்வொரு உறுப்பினருடைய சிறப்பான தனித்தன்மையாக ஆகிவிட்டால் பின்னர் அந்நிலையில்தான் ஒட்டுமொத்த ரீதியில் ஜமாஅத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் உருவாகுவதை நம்மால் காண முடியும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 மே 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **12ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِي الْأَمْرِ ۚ فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۚ إِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ

பொருள்: அல்லாஹ்விடமிருந்து(உமக்கு வழங்கப் பெற்று)ள்ள மகத்தான அருளின் காரணமாக(வே), நீர் அவர்களுக்கு மென்மை வாய்ந்தவராகத் திகழ்கின்றீர். நீர் தீய ஒழுக்கமும், கடின உள்ளமும் உடையவராக இருந்திருப்பின், அவர்கள் உம் சூழலில் இருந்து சிதறிச் சென்றிருப்பர். எனவே நீர் அவர்களை மன்னித்து அவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக. மேலும் முக்கிய விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக. பின்னர், நீர் (எது பற்றியும்) உறுதியான முடிவு எடுத்துவிட்டால், அதனை அல்லாஹ்விடத்தில் ஒப்படைத்து விடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் தன்னை நம்பியிருப்பவர்களிடம் உறுதியாக அன்பு கொள்கின்றான். (ஆலிஇம்ரான்: 160)

இன்றைய நாட்களில் பல்வேறு நாடுகளில் ஜமாஅத்துகளின் மஜாலிஸே ஷூரா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் நடந்து முடிந்துவிட்டது. சில நாடுகளில், இந்த வாரம் நடைபெற உள்ளது. மேலும், சில நாடுகளில் அடுத்த வாரம் நடைபெறும். ஜெர்மனியில் இன்று ஆரம்பமாகின்றது. அத்துடன் இன்னும் நிறைய நாடுகள் உள்ளன. அதேபோன்று யூ.கேவின் மஜ்லிஸே ஷூரா அடுத்த வாரம் நடைபெறும். அதனுடன் இன்னும் பல நாடுகளும் இணைந்துள்ளன.

ஷூராவின் முக்கியத்துவம் மற்றும் பிரதிநிதிகளின் பெறுப்புகளைக் குறித்து நான் முன்னரும் குத்பாக்களில் கவனமூட்டியிருக்கின்றேன். ஆனால், அவ்வாறு செய்து தற்போது சில ஆண்டுகள் கழிந்துவிட்டன. எனவே இன்று மீண்டும் அதுதொடர்பான அல்லாஹ்வின் கட்டளை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி, ஜமாஅத்தின் மரபுகள் மற்றும் வழிமுறைகளுக்கேற்ப சில விஷயங்களைக் கூறுவதை நான் உகந்ததாக கருதினேன். எங்கு மஜாலிஸே ஷூரா நடைபெற்று முடிந்துவிட்டனவோ அங்குள்ள ஷூராவின் பிரதிநிதிகளும் ஷூரா பிரதிநிதிகளின் பொறுப்புகள் தொடர்பான இந்த விஷயங்களிலிருந்து பயன் பெற முடியும்.

**மேலும் ஷூராவின் உறுப்பினர்கள் இந்த விஷயங்களை நினைவிற் கொள்ள வேண்டும். ஏனெனில், மஜ்லிஸே ஷூராவின் பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீது காலத்தின் கலீஃபா தீர்ப்பு வழங்கிய பிறகே (அதன்) உறுப்பினர்களின் சில பொறுப்புகள் ஆரம்பமாகின்றன. மேலும் அவற்றை செயல்படுத்துவது மற்றும் தங்களது பங்களிப்பை வழங்குவது ஒவ்வொரு ஷூரா உறுப்பினரின் கடமையாகும்.**

எவ்வாறு இருப்பினும், அந்த பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுவதற்கு முன்னர் நான் (துவக்கத்தில்) ஓதிய அந்த வசனத்தின் ஒளியில் நான் சில விஷயங்களைக் கூறுவேன். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மற்றும் அன்னாரின் வழிமுறையை எடுத்துரைப்பேன்.

இதன் தொடர்ச்சி : அடுத்த இதழில்...

தமிழாக்கம் : மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad